


# கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக எலியா வரவேண்டுமா?

## (Must Elijah Come Before The Second Coming Of Christ?)


**போதகர். A. சாமுவேல்**

# பொருளடக்கம்


1. இதோ, நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன் 2
2. எலியா வருகைக்கு முந்திவரவேண்டுமா? 8
3. வருகிறவனாகிய எலியா இவன்தான் 13
4. எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது 18
5. தீர்க்கதரிசிகளைக் கல்லெறிகிறவளே! 30
6. ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் 31
7. கர்த்தர் சொல்லுகிறதாவது 32
8. எலியா வந்தாயிற்று 32
9. இந்தக் கடைசிகால எலியா யார்? 39
10. தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை உறுதிப்படுத்துதல் 42
11. உரைக்கப்பட்ட வார்த்தை நிறைவேறுதல் 64
12. இயேசுகிறிஸ்துவின் மூன்று வருகைகள் 76
13. தேவன் எலியாவின் ஆவியை ஐந்துமுறை பயன்படுத்துகிறார் 78

## முன்னுரை

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக. கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! தேவனுடைய பெரிதான கிருபையினால் கல்வாரி கூடாரத்தின் ஊழியமானது ஏழாம் சபையின் தூதன் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட, வேதத்தில் மறைந்திருக்கின்ற இரகசியங்களையும் மேலான வெளிப்பாடுகளையும் கொண்டு இயேசுகிறிஸ்துவுக்கென்று ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் நடைபெற்று வருகிறது.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இந்த ஸ்தலத்தில் முழுமையான சத்தியத்தைத் தேவஆவியைக் கொண்டு பகுத்துப் போதிப்பதுடன், இந்த மேன்மையான செய்தியை உலகத்தின் பலபாகங்களில் இருக்கும் மற்றவர்களும் கேட்டு வருகைக்கு ஆயத்தமாகி, எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெற வேண்டுமென்ற ஆத்தும பாரத்துடன் இணையதளம் மூலமாகவும் கொடுக்கப்படுகிறது. அநேக தேவனுடைய பிள்ளைகள் முழுமையான சத்தியத்தைக் கேட்டுப் பயனடைகின்றனர்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக எலியா வரவேண்டுமா? என்னும் இந்தச் சிறிய புத்தகத்தை வாசிக்கின்ற நீங்களும் முழுமையான சத்தியத்தை உணர்ந்து கொண்டு கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாவீர்கள் என்று விசுவாசிக்கிறேன். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

...ஆமென்...

கிறிஸ்துவின் பணியில்,
**போதகர். A. சாமுவேல்**,
கல்வாரி கூடாரம்,
வளசரவாக்கம்,
சென்னை - 600087.



# கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக எலியா வரவேண்டுமா?

நாம் வாழுகிற காலம் கடைசி காலம் என்றும், உலகத்தின் முடிவு சமீபமாயிருக்கிறதென்றும் கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். கர்த்தருடைய வருகை மிகவும் சமீபமாயிருக்கிறதென்றும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய மணவாட்டியை மத்திய ஆகாயத்தில் சீக்கிரமாய் சந்திப்பார் (1 தெச 4:16, 17) என்றும் ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனும் அறிந்திருக்கிறான். ஆனால் கர்த்தருடைய முதலாம் வருகைக்கு முன்னோடியாக **(Forerunner)** யோவான் ஸ்நானன் **(John The Baptist)** அனுப்பப்பட்டது போல அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக எலியாவின் ஆவியையுடைய ஒரு தீர்க்கதரிசி வரவேண்டும் என்பதை அநேகர் அறியாதிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து மத்தேயு 24:24ல் சொன்னவண்ணமாக இப்பொழுது, உலகத்தில் அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பி அநேகரை வழிவிலகச் செய்கிறார்கள். ஆனால், **கள்ளத்தீர்க்கதரிசிகள் (False Prophets) தோன்றுவார்கள் என்று சொன்ன அதே தேவன், ஒரு உண்மையான தீர்க்கதரிசியும் (True Prophet) வரவேண்டும் என்றும் வேதத்தில் சொல்லியிருக்கிறார்.** அப்படியென்றால், அந்த எலியா யார்? அவர் வந்துவிட்டாரா? என்பதை வேதத்தின் அடிப்படையில் நாம் பார்ப்போம்.

## 1.இதோ, நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன் (Behold, I will Send Unto You Elijah the Prophet):

**மல்கியா 4:5,6 5. இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.**

**6. நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத் திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக் களிடத்திற்கும் திருப்புவான்.**

இதோ, இங்கே எலியாவின் வருகையைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வருகைக்கு முன்பாக எலியா தீர்க்கதரிசி அனுப்பப்படுவார் என்று மல்கியா தீர்க்கத் தரிசி இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு நானூறு வருஷங்களுக்கு (400 Years) முன்னதாகச் சொல்லியிருக்கிறார். இந்த வசனங்கள் கூட்டுப்பொருள் (Compound Meaning) கொண்டதாக இருக்கின்றன என்பதை அநேகர் அறியாதிருக் கிறார்கள். இது, எலியாவின் இரண்டு வெவ்வேறான வருகையைக் குறிக்கிறது. (Two Separate Comings of Elijah).

1. முதல் பாகமானது யோவான் ஸ்நானனைக் குறிக்கிறது. அது **கர்த்தருடைய பெரிதான நாளுக்கு** (Great Day of the Lord) முன்பாக நிறைவேறுகிறது.

2. இரண்டாம் பாகமானது, கடைசிகாலத்தில் வரும் எலியா தீர்க்கதரிசியைக் குறிக்கிறது. அது **கர்த்தருடைய பயங்கரமான நாளுக்கு** (Dreadful Day of the Lord) முன்பாக நிறைவேறுகிறது.

கர்த்தருடைய பெரியநாள் என்று சொல்லும்போது, அது இயேசுகிறிஸ்துவின் பிறப்பாக இருக்கிறது. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பாக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டார். (தேவன் மாம்சத்தில் வெளிப் பட்டார்) (God Manifested in Flesh) (1 தீமோ 3: 16). அவர் உலகத்திலே பிறந்தார். அதுதான் இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகை. இப்பொழுது, நாம் கடைசிகாலத்தில் இருக்கிறோம். உலக அழிவை எதிர்நோக்கியிருக்கிறோம். இது இரண்டாம் வருகையின் காலம். இப்பொழுது கர்த்தருடைய பயங்கரமான



நாள் சமீபமாயிருக்கிறது. பிள்ளைகள் என்பது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் (Elected People) குறிக்கும். ஆகையால் கர்த்தருடைய முதலாம் வருகைக்கு முன்பாகவும் எலியா வரவேண்டும். கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு முன்பாகவும் எலியா வரவேண்டும் என்று நாம் பார்க்கிறோம். அதைக் குறித்து காபிரியேல் (Gabriel) தூதன் சகரியாவுக்குச் சொல்லும்போது, எப்படி சொல்லுகிறார் என்று பாருங்கள்.

**லூக்கா 1: 16, 17 16. அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான்.**

**17.பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத் திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்.**

காபிரியேல் தூதன் சகரியாவுக்குத் தெளிவாகச் சொல்லுகிறார். “உனக்குப் பிறக்கப்போகிற மகனுக்கு யோவான் என்று பெயரிடுவாயாக. அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திருப்புவான். பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளை களிடத்திற்குத் திருப்புவான். கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்குத் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்” என்று சொல்லுகிறார். அவன் மேசியாவுக்கு ஒரு முன்னோடியாக இருப்பான் (He will be a forerunner to the Messiah) என்று சொல்லுகிறதை நாம் வாசிக்கிறோம். அவன் பிதாக்களுடைய இருதயத்தைப்

பிள்ளைகளிடத்திற்குத் திருப்புவான். அதாவது, நியாயப் பிரமாணத்தின் கீழ் இருந்த பழைய ஏற்பாட்டு பிதாக்களுடைய இருதயத்தை, அவர்களுடைய விசுவாசத்தை, வெளிப் படுத்தப்பட்ட வார்த்தையாகிய கிறிஸ்துவினிடத்திற்குத் திருப்பினான். ஆனால், பிள்ளைகளுடைய இருதயத்தைப் பிதாக்களிடத்திற்குத் திருப்புவான் என்று அங்கே எழுத வில்லை. மல்கியா4:6ன் ஒருபகுதிதான் அங்கே நிறைவேறுகிறது.

**ஆதியாகமம் 3:15 உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.**

இந்த ஒரே வசனத்தில் இரண்டு பகுதிகள் இருக்கிறது. சர்ப்பத்தின் வித்து காயீன் (Cain). ஸ்திரீயின் வித்து ஆபேல் (Abel). காயீன் ஆபேலைக் கொன்றுபோட்டான். உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் என்ற வார்த்தை உடனே நிறைவேறுகிறது. ஆனால், அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்ற வார்த்தை, நாலாயிரம் வருஷங்களுக்குப் பின்புதான் நிறைவேறுகிறது. இயேசுகிறிஸ்து ஸ்திரீயின் வித்தாக வந்து, சர்ப்பத்தின் (சாத்தானின்) தலையைச் சிலுவையிலே நசுக்கினார். சர்ப்பமானது அவருக்கு மரணத்தை உண்டுபண்ணினது. ஒரே வசனம் இரண்டு பகுதியாக இருக்கிறது. ஒரு பகுதி உடனே நிறைவேறுகிறது. மற்றொரு பகுதி நாலாயிரம் வருஷங்களுக்குப் பிறகுதான் நிறைவேறுகிறது.

அதைப் போலத்தான் மல்கியா 4: 5,6 முதல் பகுதி, பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்குத் திருப்புகிறது. அது கர்த்தருடைய பெரிதான நாள். அதன்பின்பு, இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பின்பு, பிள்ளைகளுடைய



இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்குத் திருப்புகிறது. அது கர்த்தருடைய பயங்கரமான நாள்.

காபிரியேல் தூதன் யோவானைக் குறித்துச் சகரியாவுக்குச் சொல்லும்போது, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் (Spirit and Power of Elijah) அவருக்கு முன்னே நடப்பான் என்று சொல்லுகிறதை நாம் வாசிக்கிறோம். அவன் எலியா என்று காபிரியேல் தூதன் குறிப்பிடுகிறார். மல்கியா 4:6ன் ஒரு பகுதியை மாத்திரம் யோவான் ஸ்நானன் நிறைவேற்றுகிறான் (John was to fulfill only a portion of Malachi 4:6). அவன் பிள்ளைகளுடைய இருதயத்தைப் பிதாக்களுக்குத் திருப்பவில்லை. அப்படியென்றால், இந்தக் கடைசி காலத்தில் உலகத்தைத் தேவன் அழிப்பதற்குமுன், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாகவும் ஒரு எலியா தீர்க்கதரிசி அனுப்பப்படவேண்டும். அந்த எலியா இந்தக் கடைசிகாலத்தில் இருக்கும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டப் பிள்ளைகளாகிய நம்முடைய இருதயத்தை (விசுவாசத்தை) நம்முடைய பிதாக்களாகிய ஆதி அப்போஸ் தலர்களின் இருதயத்திற்குத் (Faith of The Early Apostolic Fathers) திருப்ப வேண்டும்.

## தீர்க்கதரிசிகள் தேவனால் ஏற்படுத்தப்படுகிறார்கள் (Prophets are ordained by God):

**தீர்க்கதரிசிகள் தேவனால் ஏற்படுத்தப்படு கிறார்கள். அவர்கள் மனுஷனால் ஏற்படுத்தப்படுவ தில்லை (Prophets are ordained by God, not by men)** கர்த்தர் எலியாவை அழைத்து, அவனை அந்த ஸ்தானத்திலே, அபிஷேகம் பண்ணினார் (God called Elijah and anointed him in that position). மோசே (Moses), அவனாகவே தன்னைத் தீர்க்கதரிசியாக வெளிப்படுத்தவில்லை. எரேமியாவைக் (Jeremiah) குறித்து கர்த்தர் என்ன சொல்லுகிறார்?

**எரேமியா 1:5 நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத் திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்.**

ஆதலால் தீர்க்கதரிசிகள் தானாக ஏற்பட முடியாது. அல்லது ஓட்டு போட்டும் ஏற்படுத்த முடியாது. அல்லது, ஒருவர் தலையின் மேல் கையை வைத்து, “இவர் தீர்க்கதரிசி” என்று சொல்லவும் முடியாது. தேவன் அவர்களை ஏற்படுத்த வேண்டும். தேவனாலே அவர்கள் நியமிக்கப்பட்டு, அவரால் அவர்கள் அனுப்பப்பட்டு, அவருடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும். (God ordain them and send them to preach His Word).

அவர்கள் பிறக்கும் போதே தீர்க்கதரிசிகளாக இருக்கிறார்கள். தேவனால் முன்கூட்டியே நியமிக்கப்பட்டிருக் கிறார்கள் (Foreordained). ஐந்து விதமான ஊழியத்தில் (Fivefold Ministry), ஆண்டவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார் என்று எபேசியர் 4: 13ல் வாசிக்கிறோம், இந்த ஐந்து விதமான ஊழியமும் மனுஷர்களால் ஏற்படுவதில்லை (Five offices of the church is not ordained by men), தலையில் கை வைத்து ஜெபம் பண்ணுவதாலோ, அல்லது ஓட்டு போட்டோ வரமுடியாது, **தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே** என்று ரோமர் 11: 29ல் வாசிக்கிறோம். ஆகையால், எலியா தேவனால் ஏற்படுத்தப்பட்ட மனுஷன். தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு தீர்க்கதரிசி. மனுஷனால் ஏற்படுத்தப்படவில்லை, அல்லது அவனாகவே தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று சொல்லவில்லை.



## 2.எலியா வருகைக்கு முந்திவரவேண்டுமா? (Must Elijah First Come Before Coming?):

**மத்தேயு 17: 10-11 10. அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: அப்படியானால் எலியா முந்தி வரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படியென்று கேட்டார்கள்.**

**11. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்.**

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் அவரிடத்தில், எலியா முந்தி வரவேண்டும் (Elijah must first come) என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படி? என்று கேட்டார்கள். அப்பொழுது இயேசுகிறிஸ்து, “எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்” (Elijah truly shall first come, and restore all things) என்று சொல்லுகிறார். எலியா தீர்க்கதரிசியை முதலாவது வேதத்தில் எங்கே பார்க்கிறோம்?

**1.இராஜாக்கள் 17:1 கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின் படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான்.**

எலியாவைக் குறித்து, 1 இராஜாக்கள் 17ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். எலியா ஆகாபின் நாட்களில் தோன்றினான். அவன் இஸ்ரவேல் ஜனங்களைக் கர்த்தரிடமாகத் திருப்பினான். அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் கர்த்தர் எலியா தீர்க்கதரிசியின்

வார்த்தையை உறுதிப்படுத்தினார். எலியா “கர்த்தர் சொல்லுகிறார்” (Thus saith the Lord) என்று உரைக்கும்போது, அது நிறைவேறினது. அவன் ஒரு பெரிய தீர்க்கதரிசியாகக் (Major Prophet) காணப்பட்டான். கர்த்தர் அவனை ஆகாயத்தில் மேலே எடுத்துக்கொண்டார். அதோடு கூட அவன் ஊழியம் முடியவில்லை. அவன் மேலிருந்த ஆவி எலிசாவின் மேல் (Elisha) இரட்டிப்பாக வந்தது. 2. இராஜாக்கள் 2:11 - 15 வரைக்கும் நாம் அதை வாசிக்கிறோம். இப்படியாக பழைய ஏற்பாட்டில் எலியாவின் ஆவி, எலிசாவின் மேல் இரண்டு மடங்காக வந்ததை நாம் பார்க்கிறோம். அதோடு கூட எலியாவின் ஊழியம் முடிவடையவில்லை. புதிய ஏற்பாட்டிலும் அது தொடர்கிறது. இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்பதாகவும், அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்பதாகவும் அந்த எலியாவின் ஊழியம் வருகிறதை நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம்.

இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டான். அவனைக் குறித்து தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறது என்றும், அதன்பின்பு இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட எலியா யார் என்றும் நாம் பார்க்கப் போகிறோம்.

யோவான் ஸ்நானன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட எலியாவாக இருக்கிறான் (John the Baptist was the Elijah sent before First Coming of our Lord Jesus Christ). நான் வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இருக்கிறேன் (I am the voice in the wilderness) என்று யோவான் சொல்லுகிறான். அதைக்குறித்து வேதத்தில் எங்கே எழுதியிருக்கிறது?



**ஏசாயா 40:3,5 3.கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள், அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும்,**

**5.கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று.**

யோவான் 1 : 23ல் எழுதியிருக்கிறபடி, நான் வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இருக்கிறேன் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னதை யோவான் சொல்லுகிறான். நான் அந்த சத்தமாயிருக்கிறேன் (I am the Voice) என்று சொல்லுகிறான். இதைத்தான் மத்தேயு 3ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம்.

**மத்தேயு 3: 1-3 1.அந்நாட்களில் யோவான் ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து:**

**2. மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்.**

**3.கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே.**

இந்த யோவான் ஒரு சத்தமாக இருக்கிறான். யோவான் எலியாவாக (Elijah) இருக்கிறான். அவன் ஒரு சத்தமாக (Voice) இருக்கிறான். அதுமாத்திரமல்ல, அவன் ஒரு தூதனாகவும் (Angel) இருக்கிறான். மத்தேயு 11ம் அதிகாரத்தில், அவன் ஒரு தூதனாக இருக்கிறான் என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

**மத்தேயு 11: 10. அதெப்படியெனில்: இதோ, நான் என் தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப் பட்டவன் இவன்தான்.**

அவன் தேவனுக்கு முன்பாக அனுப்பப்பட்ட ஒரு தூதன் (He was an angel sent before God). "அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான்' என்ற வாக்கியத்தின் நிறைவேறுதல் தான் இந்த யோவான் ஸ்நானன் என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். அது எங்கே எழுதி யிருக்கிறது?

**மல்கியா 3:1 இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்: இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.** பாருங்கள், ஒரு தூதன் முன்னதாக வரவேண்டும். அவருக்கு வழியை ஆயத்தப்படுத்தவேண்டும். அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும், உடன்படிக்கையின் தூதனுமான இயேசு கிறிஸ்து வருவார். அல்லேலூயா.

யோவானைக் குறித்து, மல்கியா 3:1, ஏசாயா 40: 3, 5, மல்கியா 4:5,6 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டதெல்லாம் நிறைவேறினது. ஆகையால், அவன் எலியாவாக இருக்கிறான். அவன் ஒரு சத்தமாக இருக்கிறான். அவன் ஒரு தூதனாகவும் இருக்கிறான். அவன் முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன். அவனுடைய ஊழியம் என்ன? **ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தம் பண்ண வேண்டும்.**



ஒரு ஜனக்கூட்டத்தைக் கர்த்தருக்கு ஆயத்தம்பண்ணுவது தான் அவனுடைய ஊழியம்.

**இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி** என்று இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சொல்லுகிறான். இயேசுகிறிஸ்து அவனிடம் ஞானஸ்நானம் எடுக்க வரும்போது நீர் தான் எனக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். நான் உமக்கு ஞானஸ்நானம் கொடுக்கப் பாத்திரவான் இல்லை என்று யோவான் சொல்லும்போது, **"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது"** என்று இயேசு சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்து வார்த்தையாக (Word) இருக்கிறார். யோவான் தீர்க்கதரிசியாக (Prophet) இருக்கிறான். வார்த்தையானது எப்பொழுதும் தீர்க்கதரிசியினிடத்திலே வருகிறது. அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் இறங்கினபோது, "இவர்தான் மேசியா, நீங்கள் நாலாயிரம் வருஷமாக எதிர்ப்பார்த்திருக்கிற மேசியா இவர்தான். இவர்தான் உங்களுக்குப் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பார். இவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல. இவ்வளவு நேரம் நான் சாட்சி கொடுத்தது இவரைக் குறித்துதான்" என்று ஜனங்களை இயேசுகிறிஸ்துவினிடத்தில் திருப்பினான்.

ஒரு கூட்டமான ஜனங்களை இயேசுகிறிஸ்து வினிடத்தில் திருப்புகிறதுதான் யோவானுடைய ஊழியமாக இருந்தது. எலியாவின் வேலையும் அதுதான். **எலியா உலகத்தில் வரும்போது, யேசபேல் உபதேசத்தினாலே ஜனங்கள் தீட்டுப்பட்டிருந்தார்கள்.** அவர்கள் விக்கிரக ஆராதனைச் செய்து, நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாக ஜீவித்து, சீர்கெட்டவர்களாய் இருந்தார்கள். ஆனால் எலியா

வந்து, கர்த்தரே தேவன் என்று கர்மேல் பர்வதத்தில் (Mount Carmel) நிருபித்தான்.

**1.இராஜாக்கள் 18:36,37ல் இஸ்ரவேலில் நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும்** என்று எலியா சொல்லும்பொழுது, வானத்திலிருந்து அக்கினி வந்து பலியைப் பட்சித்துப் போட்டது. ஜனங்கள் கர்த்தரே தேவன், கர்த்தரே தேவன் என்று சொன்னார்கள். ஜனங்களை யேசபேல் உபதேசத்திலிருந்து வார்த்தைக்கு, அதாவது மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குத் திருப்புவதுதான் எலியாவின் ஊழியமாக இருந்தது. அந்த எலியா என்ன செய்தானோ, அதைத்தான் இந்த எலியாவாகிய யோவான் ஸ்நானன் செய்தான்.

ஜனங்களை நியாயப்பிரமாணத்திலிருந்தும், வேத பாரகருடைய பாரம்பரியங்களிலிருந்தும், சடங்காச்சாரியங் களிலிருந்தும் கிருபைக்குத் திருப்பினான் (From Law To Grace). அதாவது, **இயேசுகிறிஸ்துவினிடத்தில் திருப்புவது தான் யோவானின் ஊழியமாக இருந்தது.** உத்தமமான ஒரு ஜனத்தை அவன் ஆயத்தப்படுத்துவான் என்று லூக்கா 1:17ல் சொல்லப்பட்ட வார்த்தை நிறைவேறினது.

## 3.வருகிறவனாகிய எலியா இவன்தான் (This was Elijah, which was to come):

இயேசுகிறிஸ்து உலகத்தில் வரும்போது அவர் யோவான் ஸ்நானனைக் குறித்து என்ன சொல்லுகிறார்?



**மத்தேயு 11:13,14 13.நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான் வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு.**

**14. நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிற வனாகிய எலியா இவன்தான்.**

இயேசுகிறிஸ்து, யோவான்தான் எலியா என்று சொல்லு கிறார். அந்த எலியா இந்த யோவான் ஸ்நானன் தான் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சரியாகச் சொல்லுகிறதை நாம் வாசிக்கிறோம்.யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருக்கும்போது, யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் அவனிடத்தில் அனுப்பி நீர் யார் என்று கேட்கிறார்கள்.

**யோவான் 1:19-23 19. எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர் யார் என்று கேட்டபொழுது,**

**20. அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்று அறிக்கையிட்டான்.**

**21. அப்பொழுது அவர்கள்: பின்னை யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு: நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள். அதற்கும்: அல்ல என்றான்.**

**22. அவர்கள் பின்னும் அவனை நோக்கி: நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு,உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள்.**

**23.அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே,**

**நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான்.**

அவர்கள் நீ எலியாவா என்று கேட்கும்பொழுது, அவன், "நான் எலியா அல்ல" என்று சொல்லுகிறான். இயேசுகிறிஸ்து அவன் தான் எலியா என்று சொல்லுகிறார். இதிலே ஒரு முரண்பாடு (Contradiction) இருந்தது போலத் தெரிகிறது. வேதத்தில் முரண்பாடு உண்டா? இல்லை. அது சரியாகத்தான் இருக்கிறது. யோவான் சொன்னதும் சரிதான். இயேசுகிறிஸ்து சொன்னதும் சரிதான். அவன் என்ன சொல்லுகிறான் என்றால், கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்படும் எலியா நான் இல்லை என்று சொல்லுகிறான். நான் கர்த்தருடைய பயங்கரமான நாளுக்கு முன்பாக அனுப்பப்படும் எலியா அல்ல. எல்லாவற்றையும் சீர்ப்படுத்தும் எலியா நான் அல்ல, பிள்ளைகளுடைய இருதயத்தைப் பிதாக்களிடத்திற்குத் திரும்பும் எலியா நான் அல்ல என்று சொல்லுகிறான்.

அப்படியென்றால், இன்னொரு எலியா வரவேண்டியதாய் இருக்கிறது. இவன் இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட எலியா. மேசியாவுக்கு முன்பாக எலியா வரவேண்டும் என்று யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். (They were expecting an Elijah to forerun Messiah) அப்பொழுது மேசியா வந்து உலகத்தை ஆளுகை செய்வார், அவர்களும் அவரோடு சேர்ந்து உலகத்தை ஆளுகை செய்வார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படி எதிர்ப்பார்த்துதான் அவனிடம் சென்று கேட்கிறார்கள். இதோ, மேசியா வந்து உலகத்தை ஆளுகைச் செய்வார், அதற்கு முன்னோடியாக எலியா வரவேண்டும் என்று மல்கியாவில் சொல்லியிருக்கிறது. நீர் அந்த எலியாவா? என்று கேட்கும் பொழுது, அவன், நான் அந்த



எலியா அல்ல என்று சொன்னான். நீங்கள் எதிர்ப்பார்க்கும் அந்த எலியா நான் இல்லை. அந்த எலியா வந்தபின்பு ஆயிர வருஷ ஆளுகை (Millennium) வரும், இயேசுகிறிஸ்து உலகத்தை ஆளுகை செய்வார். நீங்கள் அப்படி எதிர்பார்த்துக் கேட்கிறீர்கள். நான் அந்த எலியா அல்ல. நான் கர்த்தருக்கு வழியைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாக இருக்கிறேன் என்று சொல்லுகிறான்.

அவர்கள் மனதில் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதற்காகத்தான், "நான் அந்த எலியா அல்ல" என்று சொல்லுகிறான். ஆனால், இயேசுகிறிஸ்து அவன் எலியாதான் என்று சொல்லுவது, அவன் முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன் என்பதைக் குறிக்கிறது. அவனுடைய வருகைக்குப் பின்பு உலகத்திற்கு முடிவு ஏற்படவில்லை. ஆனால், நீங்கள் எதிர்பார்க்கும் எலியா வரும்போது, உலகத்திற்கு முடிவு ஏற்பட்டு, இயேசுகிறிஸ்து உலகத்தை ஆயிரம் வருஷம் ஆளுகை செய்வார் என்று யோவான் சொல்லுகிறான்.

**முதலில் எலியா வரவேண்டும். அதன்பின்பு கர்த்தருடைய இரண்டாம் வருகை இருக்கும்.** அந்த எலியாவை விசுவாசியாதவர்கள் அனைவரும் கைவிடப் படுவார்கள். அதன்பின்பு, இயேசுகிறிஸ்து மத்தேயு 24:21ல் சொன்ன வண்ணமாக, உலகமுண்டானது முதற்கொண்டு இதுவரைக்கும் இல்லாத மிகுந்த உபத்திரவக்காலம் (Great Tribulation) அப்பொழுது ஏற்படும். அப்பொழுது அந்திக் கிறிஸ்து (Antichrist) தோன்றி உலகம் முழுவதையும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவான். அதே நேரத்தில், வெளிப்படுத்தல் 11ம் அதிகாரத்தில் சொன்னபடி, இரண்டு சாட்சிகள் (Two Witnesses- Moses & Elijah) தோன்றி

யூதர்களுக்குச் சத்தியத்தை அறிவிப்பார்கள். அதில் ஒருவர் மோசேயின் ஆவியையும், மற்றவர் எலியாவின் ஆவியையும் உடையவர்களாய் இருப்பார்கள். 1,44,000 உண்மையான யூதர்கள் அவர்களின் செய்தியை விசுவாசிப்பார்கள். அவர்கள் எல்லோரும் மேசியாவைச் சிலுவையில் அறைந்த குற்றத்தை உணர்ந்து அதற்காகப் புலம்பி அழுவார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியினால் முத்திரிக்கப்படுவார்கள். அதன்பின்பு கர்த்தர் தம்முடைய இரண்டு சாட்சிகளையும் மேலே எடுத்துக் கொள்வார்.

அந்திக்கிறிஸ்துவானவன் அந்த 1,44,000 யூதர்களையும், புத்தியில்லாத கன்னிகைகளையும் (Foolish Virgins) கொன்று போடுவான். அதன் பின்பு வெளிப்படுத்தல் 16:16ல் சொன்ன படி, அர்மகெதோன் (Armageddon) யுத்தத்தில், அதாவது மூன்றாம் உலக யுத்தத்தில் ( III World War) உலகம் முழுவதும் அழிந்து போகும். கர்த்தர் இந்தப் பூமியைச் சுத்திகரித்து, அதை ஏதேனைப்போல் மாற்றி தம்முடைய பரிசுத்தவான்கள் அதிலே ஆயிரம் வருஷம் (Millennium ) அரசாளும்படிச் செய்வார். அதன்பின்பு, வெளிப்படுத்தல் 20ம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறபடி, பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு (Great White Throne Judgment) செலுத்தப்படும். இதுவரைக்கும் உலகத்தில் பிறந்த அனைவரும் உயிரோடு எழுந்து தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைவார்கள். அதன்பின்பு புதிய எருசலேமாகிய (New Jerusalem) நகரம் வானத்திலிருந்து இறங்கி வந்து இந்தப் பூமியிலே ஸ்தாபிக்கப்படும். **தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் எல்லாரும் அந்தப் பட்டணத்திலே நித்தியகாலமாக அவரோடு கூட வாழ்வார்கள்.** இவ்வளவு காரியங்கள் இருக்கிறது. தேவனுடைய வார்த்தை விளையாட்டுக் காரியமல்ல.



## 4.எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப் படுத்துவது (Elijah shall first come and restore all things):

**மத்தேயு 17: 11 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான்.**

**எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப் படுத்துவது மெய்தான் (Elijah truly shall first come, and restore all things) என்று இயேசுகிறிஸ்து சொல்லும் பொழுது, அது வருங்காலத்தைக் குறித்துச் (Future Tense) சொல்லுகிறார்.** வரப்போகிற எலியாவைக் குறித்துச் சொல்லுகிறார். எலியா வந்தாயிற்று என்று சொல்லும்போது, அது கடந்தகாலமாக (Past Tense) இருக்கிறது. அது யோவான் ஸ்நானன். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எல்லாவற்றையும் நன்றாக அறிந்திருந்தார். அவர் தேவனாக இருக்கிறார். **யோவான் ஸ்நானன் எல்லாவற்றையும் சீர்ப்படுத் தினானா? இல்லை.** அவன் ஒரு கூட்டமான ஜனத்தை ஆயத்தப்படுத்தினானேயல்லாமல், எல்லா சத்தியங்களையும் திரும்ப கொண்டுவரவில்லை. பரிசுத்த பேதுரு என்ன சொல்லுகிறாரென்றால், இயேசுகிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர் திரும்ப வரவேண்டு மென்றால் சத்தியம் எல்லாமே திரும்ப கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறார். இழந்துபோன சத்தியம் எல்லாமே வந்தால்தான் இயேசுகிறிஸ்து திரும்ப வருவார் அல்லது, அவர் பரலோகத்தில் தான் இருப்பார் என்று பேதுரு சொல்லுகிறார்.

**அப்போஸ்தலர் 3:19,21 19. ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறு தலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே**

**குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களி டத்தில் அனுப்பும்படிக்கும்,**

**21. உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்த வைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வரு மளவும் பரலோகம் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறு தலின் காலங்கள் (Period of Restoration) வரவேண்டும். அது வந்த பின்பு தான் இயேசுகிறிஸ்து உங்களிடத்திற்கு வருவார். அதுவரைக்கும் பரலோகம் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும். உலகத்தோற்றமுதல் தீர்க்கதரிசிகள் மூலமாய் சொல்லப்பட்ட எல்லா வார்த்தைகளும் வெளிப்படும் வரைக்கும் அவர் பரலோகத்தில்தான் இருப்பார் (Whom the heaven must receive until the times of restitution of all things), அவர் வரமாட்டார் என்று பேதுரு சொல்லுகிறார். எல்லாம் திரும்ப கொடுக்கப் படவேண்டும். எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்படுத்த வேண்டும். எல்லா சத்தியத்தையும் சீர்ப்படுத்தின பின்பு தான் இயேசுகிறிஸ்து வருவார். எனவே, எலியாவின் ஊழியம் (Elijah's Ministry) மிக அவசியமாக இருக்கிறது.

மத்தேயு 24: 37-39 வரை வாசிக்கும்போது, நோவா காலத்தில் நடந்தது போலவே மனுஷகுமாரன் வெளிப்படும் காலத்திலும் நடக்கும் என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை, ஒரு செய்தியோடு அனுப்பினார். அந்தத் தீர்க்கதரிசி நோவா (Noah). அவன் என்ன சொல்லுகிறான் என்றால், "மழை பெய்யப்போகிறது, உலகம் அழியப் போகிறது, நீங்கள் பேழைக்குள்ளே வாருங்கள்" என்று சொல்லுகிறான். ஆண்டவர் ஒரு தீர்க்கதரிசி மூலமாகக் கொடுத்த செய்தியை ஏற்றுக்கொண்டவர்கள் உள்ளே வந்தார்கள். அவன் குடும்பத்தார் மாத்திரம் அதை ஏற்றுக் கொண்டார்கள். அதைப் போலவே, இந்த எலியா என்ன



சொல்லுகிறார்? கிறிஸ்துவினிடத்தில் வாருங்கள் (Come to Christ) என்று சொல்லுகிறார். கிறிஸ்து வார்த்தையாய் இருக்கிறார் (Christ is the Word), வார்த்தைக்குத் திரும்புங்கள். பாபிலோனைவிட்டு வெளியே வாருங்கள் (Come out of Babylon) (வெளி 18:4) என்று கடைசிகால எலியா சொல்லுகிறார்.

## a. பிள்ளைகளுடைய இருதயத்தைப் பிதாக் களிடத்தில் திருப்புவது (Turning The Hearts of The Children to Their Fathers):

சத்தியமானது இந்தக் காலத்தில் புரட்டப்படுகிறது (Perverted). சத்தியத்தைப் பலவிதமாகக் குழப்புகிறார்கள். அதைத் தாறுமாறாக்கியிருக்கிறார்கள். சத்தியமானது இழக்கப் பட்டுப் போயிருக்கிறது. காரணம், இன்றைக்கு உலகத்தில் பல ஆயிரத்துக்கும் (Thousands) மேலான ஸ்தாபனங்கள் (Denomi nations) இருக்கிறது. ஓவ்வொரு ஸ்தாபனமும் தங்களுடைய உபதேசம் தான் சரி என்று சொல்லுகிறார்கள். ஆனால் கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறாரென்றால், "நான் எலியா தீர்க்க தரிசியை அனுப்புவேன். அந்தத் தீர்க்கதரிசி வந்து இழந்து போன சத்தியத்தை மறுபடியும் கொண்டு வருவார். அப்பொழுது கர்த்தருடைய வருகை இருக்கும்" என்று சொல்லியிருக்கிறார்.

யோவன் ஸ்நானன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்தில் திருப்பினான். வைராக்கியமான யூதர் களாகிய அந்தப் பிதாக்களை (Fathers) தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டப் பிள்ளைகளாகிய (Children) இயேசு கிறிஸ்துவின் சீஷர்களின் விசுவாசத்திற்குத் திருப்பினான் (John the Baptist turned the heart of the Jewish fathers to the new faith in Jesus Christ). பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் (Peter, Andrew, James, John) போன்றவர்

களெல்லாம் யோவான் ஸ்நானனின் சீஷர்களாக இருந்தார்கள். இவர்தான் மேசியா என்று அவன் சொல்லும்போது, இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி இவர்தான் என்று அவன் சொல்லும்போது, அவர்கள் அந்த விசுவாசத்திற்குத் திருப்பப்பட்டார்கள். நாத்தான்வேல் (Nathanael) திருப்பப்பட்டான். இப்படியாக ஒரு கூட்டமான மக்கள் கிறிஸ்துவினிடத்தில் திருப்பப்பட்டார்கள். யோவான் ஸ்நானனை ஆண்டவர் பயன்படுத்தினார்.

இந்தப் பிள்ளைகளாகிய அப்போஸ்தலர்கள் வளர ஆரம்பித்தார்கள். அவர்கள் வளர்ந்து, பிதாக்களாக மாறி விட்டார்கள். நாம் ஒரு காலத்தில் சிறுபிள்ளையாக இருந்தோம். இப்பொழுது நாம் தாய் தகப்பனாக மாறி விட்டோம். பிதாக்களாக மாறிவிட்டோம். அதைப்போல, அந்த அப்போஸ்தலப் பிள்ளைகள் வளர்ந்து வளர்ந்து பிதாக்களாக மாறிவிட்டார்கள். அவர்கள் மூலமாக ஆண்டவர் உலக மெங்கிலும் சுவிசேஷத்தை அறிவித்தார். அவர்களைக் கொண்டு புதிய ஏற்பாடு எழுதப்பட்டது. இப்பொழுது அவர்கள் தான் பிதாக்கள். நாம் பிள்ளைகளாக இருக்கிறோம். நாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். நாம் ஒரு காலத்தில் ஸ்தாபனத்தில் இருந்தோம். இப்பொழுது நாம் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை விசுவாசிக்கிறோம்.

தம்முடைய இரண்டாம் வருகைக்கு முன், பிள்ளைகளாகிய (Children) நம்முடைய விசுவாசத்தை அந்த அப்போஸ்தலப் பிதாக்களுடைய (Apostolic Fathers) விசுவாசத்திற்குத் திரும்பும்படி கர்த்தர் எலியாவை அனுப்பியிருக்கிறார். மல்கியா 4:6ம் வசனத்தின் பின்பாகம் நிறைவேறுகிறது. நாம் இப்பொழுது மூல அஸ்திபார உபதேசத்திற்கு (Original Foundation) திருப்பப் பட்டிருக்கிறோம். இந்தக் கடைசிகால எலியா (End Time



Elijah), நம்மை ஸ்தாபனத்தில் (Organisation) இருந்தும், மனுஷனுடைய பலவிதமான கருத்துகளிலிருந்தும் (Man-made Theologies) அப்போஸ்தலப் பிதாக்களுடைய விசுவாசத்திற்குத் திருப்பியிருக்கிறார்.

## b. ஏழு சபைக்காலங்கள் (Seven Church Ages):

ஏழு சபைக்காலங்களை (7 Church Ages) நாம் பார்க்கும் போது, ஒவ்வொரு சபைக்கும் ஆண்டவர் ஒரு தூதனை அனுப்புகிறார். எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா (Ephesus, Smyrna, Pergamos, Thyatira, Sardis, Philadelphia, Laodicea) என்னும் ஏழு சபைகளுக்கு, ஆண்டவர் பவுல், இரேனியஸ், மார்டின், கொலம்பா, லூத்தர், வெஸ்லி, கடைசிகால தூதன் (Paul, Irenaeus, Martin, Columba, Luther, Wesly, End time Angel) என்ற தூதர்களை அனுப்பினார்.

இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தல் 2ம், 3ம் அதிகாரத்தில் அந்தச் சபைகளைக் குறித்துச் சொல்லுகிறார். அவர் சொல்லச் சொல்ல யோவான் அதை எழுதுகிறான். **அது இயேசு கிறிஸ்துவின் நேரடியான செய்தியாக (Direct Message) இருக்கிறது.** அந்தத் தூதனுக்கு அந்தச் செய்தி கொடுக்கப் பட்டது. ஒவ்வொரு சபைக்காலத்துக்கும் ஒரு தூதன் இருக்கிறார் (Each Church Age has an angel). ஏழாம் சபைக்கு ஒரு தூதன் இருக்கிறார்.

**யோவான் எப்படி ஒரு தூதனோ, அதைப்போல கடைசிகால எலியாவும் ஒரு தூதன் தான்.** வெளிப்படுத்தல் 1:16ல் **அவர் தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்.** அதே அதிகாரம் 20ம் வசனத்தில், நீ கண்ட ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபையின் தூதர்களாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த ஏழு நட்சத்திரங்கள் ஏழு சபைக்காலத் தூதர்களாக இருக்கிறார்கள்.

அந்தச் சபைகள் எல்லாமே பரிசுத்த பவுல் ஸ்தாபித்த புறஜாதிகளின் சபைகள். அந்த ஒவ்வொரு சபைக்கும் இயேசு கிறிஸ்து ஒரு தூதன் மூலமாக செய்தியைக் கொடுக்கும்போது, அது வரப்போகிற ஏழு சபைக் காலங்களுக்குக் கொடுக்கப் படுகிற செய்தியாக இருக்கிறது.

லவோதிக்கேயா சபையின் **தூதனுக்கு** நீ எழுத வேண்டியது என்னவெனில், என்று வெளிப்படுத்தல் 3:14ல் சொல்லும்போது, அந்தத் தூதன் கடைசிகால எலியாவாக இருக்கிறார். அவர்தான் ஏழாம் சபையின் தூதன் (Seventh Angel). அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிறார் (He is a Prophet). அந்த ஏழாம் சபையாகிய லவோதிக்கேயா சபையின் தூதனுடைய செய்திதான் வெளிப்படுத்தல் 3:14-22 வரை சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் காலம் வரும்போது, சபையானது எப்படி இருக்கிறது என்றால், அது நிர்ப் பாக்கியமுள்ளதும், பரிதபிக்கப்படத்தக்கதும், தரித்திரமுள்ள தும், குருடும், நிர்வாணமுமாக (Wretched, Miserable, Poor, Blind and Naked) இருக்கிறது. ஆனால், அது ஐசுவரிய முள்ளதும், அநேக அங்கத்தினரைக் கொண்டதுமாக இருக்கிறது. இந்த ஏழாம் தூதன் அந்தச் சபையின் குறைகளைக் கடிந்து கொள்ளுகிறார். அந்தச் சபைக்கு வேண்டிய செய்தியைக் கொடுக்கிறார்.

நாம் வாழுகிற காலம் லவோதிக்கேயா சபையின் காலம். அந்தச் சபைக்கு ஒரு தூதன் இருக்கிறார். அவர் எலியாவின் ஆவியை உடையவராக இருக்கிறார். அந்தத் தூதனுடைய செய்தி எல்லாவற்றையும் சீர்ப்படுத்துகிறது (Restore All Things). எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான் என்று இயேசுகிறிஸ்து சொன்னதுபோல, அந்தத் தூதனுடைய செய்தி எல்லா சத்தியத்தையும் திரும்ப கொண்டு வருகிறது. அந்த ஏழாம் தூதனைக் குறித்து வெளிப்படுத்தல் 10:6ல் வாசிக்கிறோம்.



## c. ஏழாம் தூதன் (Seventh Angel):

**வெளிப்படுத்தல் 10:6 இனி காலம் செல்லாது; ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும்.**

ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதும்போது தேவரகசியம் நிறைவேறும் என்று சொல்லப்படுகிறது. **தேவரகசியம் நிறைவேறும் என்றால் எல்லா சத்தியமும் வெளிப்படும் என்று பொருள்.** அந்தத் தூதன், இழந்துபோன எல்லாவற்றையும் திரும்ப கொண்டு வருகிறார். தானியேலுக்கு ஆண்டவர் வெளிப்படுத்தும் போது, நீ இதை முத்திரைபோடு என்று சொன்னார். (தானியேல் 12:4). யோவானுக்கு அவர் வெளிப்படுத்தும் போதும், **ஏழு இடி முழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரை போடு** என்று சொன்னார் (வெளி 10:3). ஆனால், ஏழாம் சபையின் தூதன் வரும்போது, கடைசிகாலத்தில் **அந்தத் தூதன் வரும்போது அந்த இரகசியங்கள் வெளிப்படும் என்று சொல்லப்படுகிறது.**

இயேசுகிறிஸ்து மத்தேயு 17:11ல் எலியா வந்து எல்லா வற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான் என்று சொன்னது இந்தக் கடைசிகால எலியாவாகிய தீர்க்கதரிசியைத்தான். தேவனுடைய வார்த்தை எப்பொழுதும் தீர்க்கதரிசியினிடம் வருகிறது. **கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்** என்று ஆமோஸ் 3:7 வாசிக்கிறோம். அதனால் இந்தக் கடைசிகால தூதன் ஒரு தீர்க்கதரிசியாக இருக்க வேண்டும். அவர்

எலியாவின் ஆவியை உடையவராக இருக்க வேண்டும். அவர் என்ன சத்தியத்தை வெளிப்படுத்துகிறார்?

❖ உலகத்தில் இப்பொழுது உயிரோடிருக்கிற பரிசுத்தவான்கள் எப்படி மறுரூபமாக்கப்படுவார்கள் என்ற இரண்டாம் வருகையைப்பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். (Mystery Of the Translation of The Living Saints)

❖ ஒரே தேவனைக் குறித்தும், தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்ற தேவத்துவத்தைப் பற்றிய இரகசியத்தையும் வெளிப்படுத்துகிறார் (Mystery Of Godliness).

❖ மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்று சொல்லப்படுகிற அந்தப் பாபிலோனைப் பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்துகிறார் (Mystery Of "Mystery Babylon, The Mother Of Harlots")

❖ சர்ப்பத்தின் வித்தைப் பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். (Mystery Of The Serpent Seed).

❖ எது சரியான ஞானஸ்நானம் என்ற இரகசியத்தை வெளிப்படுத்துகிறார் (Mystery Of True Water Baptism)

❖ மறுபடியும் பிறப்பதைக் குறித்த இரகசியத்தை வெளிப்படுத்துகிறார் (Mystery Of New Birth)

❖ முன்குறிக்கப்படுதலைக் குறித்த இரகசியத்தை வெளிப்படுத்துகிறார் (Mystery Of Predestination).

❖ ஏழு முத்திரைகளைக் குறித்த இரகசியத்தை வெளிப்படுத்துகிறார் (Mystery Of Seven Seals).

❖ ஏழு சபைகளைக் குறித்த இரகசியத்தை வெளிப்படுத்துகிறார் (Mystery Of Seven Church Ages).



❖ மிருகத்தின் முத்திரையைப்பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்துகிறார் (Mystery Of The Mark Of The Beast).

❖ அந்திகிறிஸ்துவைப் பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்துகிறார் (Mystery of the Antichrist)

இவ்விதமான இன்னும் அநேக இரகசியங்களை அவர் வெளிப்படுத்துகிறார். எல்லா இரகசியத்தையும் ஏழாம் தூதனுடைய செய்தி வெளிப்படுத்துகிறது. **எலியா வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான் என்ற வேத வாக்கியம் இப்பொழுது நிறைவேறிக் கொண்டிருக்கிறது.** யோவான் ஸ்நானன் எப்படி ஒரு தூதனாக இருந்தானோ அதைப்போல இந்த எலியாவும் ஒரு தூதனாக இருப்பார் என்று இயேசுகிறிஸ்துவே சாட்சி கொடுக்கிறார்.

**வெளிப்படுத்தல் 22:16 சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார்.**

இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். நான் கடைசிகால எலியாவை அனுப்பியிருக்கிறேன் என்று சொல்லுகிறார். அந்தச் செய்திதான் உங்களை மணவாட்டியாக மாற்றும். ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள். கர்த்தருடைய வருகையில் நீங்கள் பங்குபெற முடியும் என்று சொல்லுகிறார்.

நாங்கள் மோசேயை விசுவாசிக்கிறோம் என்று பரிசேயர்கள் சொல்லுகிறார்கள். நீங்கள் மோசேயை விசுவாசித்தால் என்னையும் விசுவாசிப்பீர்கள், அவன் என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே (யோவான் 5:46)

என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். அவர்கள் மோசேயை விசுவாசிக்கிறோம் என்று சொல்லியும் மோசே சொன்ன இயேசுவை விசுவாசிக்கவில்லை. அதைப்போல இந்தக் காலத்தின் மக்கள், நாங்கள் இயேசுவை நேசிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அவர் அனுப்பின தூதனை விசுவாசிக்கவில்லை. **அவர்கள் உண்மையாகவே இயேசுவை நேசித்தால், அவர் அனுப்பின தூதனை விசுவாசிப்பார்கள்.**

நோவாவின் செய்தியைச் சிலர்தான் விசுவாசித்தார்கள். அநேகர் அவன் செய்தியைப் புறக்கணித்தார்கள். அது அவர்களுக்கு ஜலப்பிரளயத்தின் மூலமாக அழிவைக் கொண்டு வந்தது.

யோவான் ஸ்நானனை எப்படி தவறவிட்டார்களோ, அதைப்போல, கடைசிகால எலியாவையும் ஜனங்கள் தவற விடுகிறார்கள். அவரை அறியாமறபோகிறார்கள். ஆனால், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட (Elected People) ஒரு சிறு கூட்டமான மக்கள் அவரை அறிந்து கொள்கிறார்கள். அவர்கள் அவருக்குச் செவிகொடுப்பார்கள்.

உண்மையான உபதேசத்தை அவர் திரும்ப கொண்டு வருவார் (Restore the Pure Word). மனுஷனுடைய கோட்பாடுகள், பாரம்பரியங்கள், தத்துவங்கள், அவனுடைய கருத்துக்கள் போன்றவைகள் கலக்காத உண்மையான வார்த்தையைத் தெளிவாகக் கொடுப்பதுதான் ஏழாம் தூதனுடைய செய்தி. அது கிறிஸ்துவின் சிந்தையைக் (Mind of Christ) கொண்டுவருகிறது. கலப்படமில்லாத தூய வார்த்தை (Unadulterated Pure Word) இன்றைக்குத் திரும்ப அளிக்கப்படுகிறது. அது ஒரு கூட்டமான ஜனத்தை ஆயத்தப்படுத்துகிறது. அவர்கள் மிகவும் சிலராக இருப்பார்கள்.



**மத்தேயு 7:13,14 13. இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.**

**14. ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்** என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

லோத்தின் நாட்களில் மூன்றுபேர்தான் காப்பாற்றப்பட்டார்கள். நோவாவின் செய்தியை ஏழுபேர்தான் விசுவாசித்தார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது, அவருடைய செய்தியை நாற்பது லட்சம் ஜனங்கள் கேட்டார்கள். ஆனால், நூற்றிருபதுபேர்தான் மேலறையில் போய் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். பழைய ஏற்பாட்டில் எலியா, நான் ஒருவன் மாத்திரம்தான் இருக்கிறேன். வேறே யாரும் வார்த்தையை நம்பவில்லை என்று சொன்னான். ஆனால் கர்த்தர், பாகாலுக்குத் தங்கள் முழங்காலை முடக்காத, அவன் பாதங்களை முத்தம் செய்யாத ஏழாயிரம்பேரை நான் வைத்திருக்கிறேன் என்று சொன்னார் (1 இராஜா 19:18). இப்படியாக மிகவும் சிலர்தான் இந்தக் கடைசிகால எலியாவை விசுவாசிப்பார்கள். அவர்கள் சத்தியத்திற்குத் திருப்பப்படுவார்கள். அவர்கள்தான் கிறிஸ்துவைச் சந்திக்கமுடியும். மற்றவர்கள் சந்திக்க முடியாது. நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மக்கள் எலியாவை ஏற்றுக்கொள்ளத் தவறிவிட்டார்கள் (Thousands of People failed to receive Elijah). இந்தக் கடைசிகால எலியா வந்துவிட்டார். செய்தி கொடுக்கப்பட்டாகிவிட்டது. ஆனால் ஜனங்கள் அவரை அறியவில்லை.

இந்தக் கடைசிகால எலியாவையும் அவருடைய செய்தியையும் ஏற்றுக்கொள்ளும் அவசியத்தை நீங்கள் காண்கிறீர்களா? **தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம்**

**தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக் கேற்ற பலனை அடைவான்** (மத்தேயு 10:41) என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். **நான் அனுப்புகிறவனை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்கிறான்** (யோவான் 13:20) என்றும் சொல்லுகிறார். **நாங்கள் இயேசுவை நேசிக்கிறோம் என்று சொல்லியும், அவர் அனுப்பின தீர்க்கதரிசியை எப்படி புறக்கணிக்க முடியும்?**

வெறும் பக்தி (Religious) மட்டும் இருந்த பரிசேயர் களின் ஆவி நமக்குள் இருக்கக்கூடாது. அவர்கள், தேவன் கடந்த காலத்தில் என்ன செய்தார் என்று விசுவாசித்தார்கள். ஆனால், தங்கள் கண்களுக்கு முன்பாக தேவன் செய்ததை ஏற்றுக் கொள்ள அவர்களால் முடியவில்லை. இயேசுகிறிஸ்து சுகமாக்கின அந்தக் குருடனை அவர்கள் "நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர்" என்று கடிந்து கொண்டார்கள் (யோவான் 9:28). அந்த மாயக்காரரைக் குறித்து இயேசு **"நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே"** என்று சொன்னார். அதைப்போலவே, நாம் உண்மையாகவே இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால், அவர் அனுப்பின கடைசிகால எலியாவையும் நாம் விசுவாசிப்போம். ஏனென்றால் இயேசு அவரைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். ஆகையால் நாம் இந்தக் கடைசி கால எலியாவை விசுவாசிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நோவாவின் செய்தியைப் புறக்கணித்த அனைவரும் ஜலப்பிரளயத்தில் மாண்டு போனார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேவனுடைய தீர்க்கதரிசியைப் புறக்கணிப்பது தேவனைப் புறக்கணிப்பதாக இருக்கிறது **(1 சாமு 8:4-7).** தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்புவது வரப்போகிற நியாயத் தீர்ப்புக்கு (Judgment) அடையாளமாக இருக்கிறது என்பதையும்



நாம் மறந்துவிடக் கூடாது. உதாரணம். நோவா, யோனா, எரேமியா, ஆமோஸ்..

## 5.தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! (Thou That Kill The Prophets, And Stone Them Which Are Sent Unto You):

எப்படியும் அநேகர் இந்தத் தீர்க்கதரிசியைப் புறக்கணிப் பார்கள். ஒவ்வொரு காலத்திலும் அது அப்படிதான் இருக்கிறது. எப்பொழுதும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் காலத்திற்குரிய தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்வதில்லை (மத்தேயு 5:11, 12; அப் 7:51, 52).

லட்சக்கணக்கான மக்களில் வெறும் ஏழுபேர் மாத்திரம் நோவாவுக்குச் செவிகொடுத்தார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் எப்பொழுதும் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்துக் கலகம் பண்ணினார்கள். தான் ஒருவன் மாத்திரம் இருப்பதாக நினைக்கும் அளவுக்கு அவர்கள் எலியாவை வெறுத்தார்கள். எரேமியாவைப் பரியாசம் பண்ணி அவனைத் துன்பப்படுத் தினார்கள். **எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப் பட்டவர்களைக் கல்லெறிகிறவளே!** என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் (மத்தேயு 23: 34-37). அதைப்போலவே **இந்தக் கடைசிகால எலியாவைப் பற்றி எழுதியிருக்கும் அத்தனை வேத வாக்கியமும் நிறைவேறினாலும் அநேகர் அவரைக் காணத் தவறுகிறார்கள்.** யோவான் ஸ்நானனைப் பற்றி ஏசாயா 40 : 3-5 எழுதியிருந்தாலும், அது மத்தேயு 3: 1-12ல் நிறைவேறினாலும் அதை சீஷர்களும் கூட காணத் தவறினார்கள் (மத்தேயு 17 : 10).

## 6. ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் (Wolves In Sheep's Clothing):

இன்றைக்கு உலகத்தில் நிறைந்திருக்கும் அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் மத்தியில் உண்மையான தீர்க்கதரிசியை நாம் கண்டுபிடிப்பது எப்படி? அற்புதங்கள் அடையாளங்களி னாலோ? இல்லை. ஏனென்றால் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தும் அக்கிரமச் செய்கைக்காரராய் இருப்பார்கள் என்று வேதம் சொல்லுகிறது. (மத்தேயு 7: 22-23, மாற்கு 13:22, உபா 13:1-3) அவ்விதமான தீர்க்கதரிசிகள் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்களாகக் காட்சியளிப்பார்கள் (மத்7:15). ஆனால் அவர்கள் மனுஷரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களும், அநேகரால் புகழப்படுகிறவர்களுமாய் இருப்பார்கள் (லூக் 6:26).

இந்தக் கள்ளத்தீர்க்கதரிசிகள் பண ஆசை உள்ளவர் களாகவும் (2 பேதுரு 2:1-3), ஜனங்களைப் பொய்யை நம்பும் படிச் செய்கிறவர்களாகவும் (எரே 28:15) கர்த்தருடைய செம்மையான வழியைப் புரட்டுகிறவர்களாகவும் (அப்போஸ் 13: 6-12), வஞ்சிக்கிறவர்களாகவும் (எரே 9:22), கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக உண்மையான தீர்க்கதரிசியைப் போலவே காட்சியளிப்பார்கள் (மத் 24: 24). அப்படியென்றால் உண்மையான தீர்க்க தரிசியைக் கண்டுபிடிப்பது எப்படி? **"அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்"** என்று இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (மத்தேயு 7:20). அவர்களுடைய அழைப்பும், ஊழியமும், வாழ்க்கையும் நடக்கையும் வேதப் பூர்வமாய் (Scriptural) இருக்கிறதா என்று நாம் பார்க்க வேண்டும். இந்தக் கடைசிகால எலியாவின் வாழ்க்கையும், அவருடைய ஊழியமும் வேதப்பூர்வமாக இருக்கிறது.



## 7. கர்த்தர் சொல்லுகிறதாவது (Thus Saith The Lord):

**கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வா யாகில், ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும் போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்படவேண்டாம்** (உபா 18: 21, 22) என்று எழுதியிருக்கிறது. அப்படியென்றால் ஒரு உண்மையான தீர்க்கதரிசி கர்த்தருடைய நாமத்தினால் தீர்க்கதரிசனம் உரைத்தால் அது எப்பொழுதும் நிறைவேறும் (எரே 28: 9).

இந்தக் கடைசி கால எலியா "கர்த்தர் சொல்லுகிற தாவது" (Thus Saith The Lord) என்பதை உடையவராக இருக்கிறார். அவர் "கர்த்தர் சொல்லுகிறதாவது" என்று தீர்க்கதரிசனம் உரைக்கும்போது, அவர் சொல்லியபடியே அது துல்லியமாக நிறைவேறினது. ஏனென்றால், ஒவ்வொரு உண்மையான தீர்க்கதரிசியும், "கர்த்தர் சொல்லுகிறதாவது" என்பதை உடையவர்களாக இருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் தவறாது. அபிஷேகத்தின் கீழ் ஒரு தீர்க்கதரிசி சொல்லும் வார்த்தைகள் அவருடைய சொந்த வார்த்தையாயிராமல் கர்த்தருடைய வார்த்தையாக இருக்கிறது. (1 பேதுரு 1:20, 21).

## 8. எலியா வந்தாயிற்று (Elijah Is Come Already):

**ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள். இவ்விதமாய் மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடுவார் என்றார். அவர் யோவான் ஸ்நானனைக் குறித்துத்**

**தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்து கொண்டார்கள்.**(மத்தேயு 17:12,13).

எலியா வந்தாயிற்று என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார் (Elijah has come already and they knew him not). மத்தேயு 11ம் அதிகாரத்தில் அந்த எலியா யோவான் ஸ்நானன்தான் என்று இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லும்பொழுது அவர்களுக்கு இன்னும் குழப்பம் இருந்தது. அதனால் மறுபடியும் இயேசுகிறிஸ்துவிடம், மேசியா வருவதற்கு முன் எலியா வரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அது எப்படி என்று கேட்கிறார்கள். அப்பொழுது இயேசுகிறிஸ்து, எலியா வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான் (Truly Elijah must first come, and restore all things), ஆனாலும் எலியா வந்தாயிற்று (Elijah is come already), என்று அதை இரண்டாகப் பிரிக்கிறார். எலியா வந்தாயிற்று, அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள் என்று சொல்லும்போது, அவர் யோவான் ஸ்நானனைக் குறித்துச் சொன்னார் என்று சீஷர்கள் அறிந்து கொண்டார்கள். மத்தேயு 17:10 - 13 வரைக்கும் நாம் அதை வாசிக்கின்றோம். ஆனால் எல்லாவற்றையும் சீர்ப் படுத்தும் எலியா அவனல்ல.

எலியாவை அவர்கள் சிரச்சேதம் பண்ணினார்கள். யோவான் ஸ்நானனின் தலை வெட்டப்பட்டது. அவனை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. அதனால் மேசியாவையும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. (They missed Elijah, so they missed Messiah also). அதனால் அவர்களுக்கு நியாயத்தீர்ப்பும் வந்தது.

அநேக ஜனங்கள் எலியா வரவேண்டும், எலியா வரவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள் (The multitude in



Christ's day was earnestly expecting Elijah to appear). எலியா அவர்கள் கண்களுக்கு முன்பாக வந்தான். அவனை அவர்கள் அறியவில்லை. மேசியா வரவேண்டும், மேசியா வரவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். மேசியாவும் எலியாவைத் தொடர்ந்து வந்தார். ஆனால் அவரையும் அவர்கள் அறியாமற்போனார்கள்.

அதைப்போலவே, இன்றைக்கும் அவர்கள் எலியா வரவேண்டும் என்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். **இப்பொழுதும் யூதர்கள் எலியா வரவேண்டும் என்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும்பொழுது அவர்கள் ஒரு மேசையைப் போட்டு, எலியாவிற்கு ஒரு நாற்காலியை வைக்கிறார்கள். ஒரு கோப்பையில் திராட்சரசத்தை ஊற்றிவைத்து, எலியா வருவார், இந்த இருக்கையில் உட்காருவார், அவர் திராட்சரசத்தை பானம்பண்ணுவார் என்று சொல்லுகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் எலியா வருவார், இந்த இருக்கையில் உட்காருவார், அவர் திராட்சரசத்தை பானம் பண்ணுவார் என்று சொல்லு கிறார்கள். ஒவ்வொரு வருஷமும் எலியா வருவார், வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.** எலியா வந்து விட்டார். மேசியாவும் வந்து விட்டார். ஆனால் அவர்களுக்குத் தெரியவில்லை. எலியாவை அவர்கள் அறியாமற்போனார்கள். அதனால் மேசியாவையும் அவர்கள் அறியாமற் போகும்படியான சூழ்நிலை ஏற்பட்டது. யூதர்கள் பஸ்காவை ஆசரிக்கும்போது எலியாவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் (Elijah has a very important part in every Passover observance of Jews). ஆனால் அவர்கள் எலியாவைத் தவற விட்டு விட்டார்கள்.

அதைப்போலத்தான் இரண்டாம் வருகையிலும் நடக்கிறது. இதோ, எல்லா கிறிஸ்தவர்களும் இயேசு

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கியிருக் கிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஆகாயத்தில் வருவார், நாமெல்லாரும் எடுத்துக்கொள்ளப்பட்டு (Rapture) அவரோடு கூட சேர்க்கப்படுவோம் என்று எல்லாரும் அனுதினமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மேசியாவாகிய கிறிஸ்து வருவதற்கு முன்பாக, அவருக்கு முன்னோடியாக ஒரு எலியா வரவேண்டும் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். எலியா வந்துவிட்டு அவர் சென்று விட்டார். அவருடைய செய்தி (Message) நம்மிடம் இருக்கிறது. அந்த எலியாவை அறியவில்லையென்றால், கர்த்தருடைய வருகையில் அவர்கள் பங்குபெறமுடியாது. இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக எலியா வரவேண்டும். கர்த்தருடைய வருகையில் பங்குபெற வேண்டுமென்றால் அந்த எலியாவை அறிந்து கொள்வது மிக அவசியமாக இருக்கிறது.

**1.தெசலோனிக்கேயர் 4: 16, 17 16. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்த வர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.**

**17. பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.**

இந்த வசனங்களை எல்லாரும் படிக்கிறார்கள், விசுவாசிக்கிறார்கள். ஆனால் அதற்கு முன்னதாக எலியா வரவேண்டும். எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். கர்த்தருடைய பயங்கரமான நாள் வருவதற்கு முன்னே எலியா தீர்க்கதரிசி வந்து, பிள்ளைகளுடைய இருதயத்தைப் பிதாக்களிடத்தில் திருப்பவேண்டும் என்று



தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. ஆனால், அவர்களுக்கு அது இன்னும் வெளிப்படாததினாலே, அவர்கள் இரண்டாம் வருகையில் நிச்சயமாக பங்குபெற முடியாது. இரண்டாம் வருகையில் பங்குபெற வேண்டுமென்றால் எலியாவின் ஊழியத்தை அறிந்து கொள்ள வேண்டும் (Recognize Elijah’s Ministry).

இன்னொரு தீர்க்கதரிசி மூலமாக எலியாவின் ஊழியம் மறுபடியும் வருகிறது (Elijah’s Ministry is coming again through another prophet). இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் இருந்ததை எப்படி அவர்கள் அறியாமல் இருந்தார்களோ, அதைப்போலவே இந்தத் தீர்க்கதரிசியையும் அவர்கள் அறியமாட்டார்கள். சீஷர்களிடத்தில் சொல்லும்போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதைப் பிரித்துச் (Splits) சொல்லுகிறார். எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான் என்று அவர் சொல்லும்பொழுது, அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக வரும் எலியாவைக் குறித்து அவர் சொல்லுகிறார். எலியா வந்தாயிற்று என்று சொல்லும்பொழுது, அவர் யோவான் ஸ்நானனைக் குறித்துச் சொல்லுகிறார்.

மல்கியா 4:5,6 இயேசுகிறிஸ்து இரண்டாகப் பிரித்துச் சொல்லுகிறார். ஒன்று முதலாம் வருகை (First Coming) மற்றொன்று இரண்டாம் வருகை (Second Coming). அது ஒரு எலியா, இது ஒரு எலியா என்று சொல்லும்பொழுது, அந்த சீஷர்களுக்கு எந்த அளவிற்குப் புரிந்தது என்று தெரிய வில்லை. அவர்கள் யோவான் ஸ்நானனைத்தான் அறிந்து கொண்டார்களேயொழிய, இன்னொரு எலியாவைக் குறித்து அந்த நேரத்தில் அவர்களுக்கு வெளிப்படவில்லை. இன்றைக்குக் கர்த்தர் நமக்கு அதை வெளிப்படுத்தி யிருக்கிறார்.

இந்தத் தீர்க்கத்தரிசியை அறிந்து கொண்டால் மட்டும் போதாது. அவர் சொல்லும் தேவனுடைய வார்த்தையின்படி நம்முடைய வாழ்க்கையும் இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாக மாறமுடியும். கிறிஸ்துவின் மணவாட்டி அவரைப் போலவே இருக்க வேண்டும். அவர் சொல்வதையே அவளும் சொல்ல வேண்டும் (வெளி 22:17) அவள் கிறிஸ்துவின் சிந்தையை (Mind of Christ) உடையவளாய் வேண்டும் (1 கொரி 2: 16, பிலி 2:5).

அது மாத்திரமல்ல, **புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்த மாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமை யுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்** (எபே 5: 25 - 27) என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறார்.

கிறிஸ்து தம்முடைய சபையில் அன்புகூர்ந்து, அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்தி கரித்துப் பரிசுத்தமாக்குகிறார் (He might sanctify and cleanse it with the washing of water by the WORD). இந்தக் கடைசிகால எலியாவின் செய்தி, திருவசனமாகிய தூய வார்த்தையைக் கிறிஸ்துவின் மணவாட்டிக்குத் திரும்ப அளிக்கிறது. இவருடைய செய்திதான் இயேசுகிறிஸ்துவைப் பிரியப்படுத்துவது எது? பிரியப்படுத்தாதது எது? என்று மணவாட்டிக்குக் காண்பிக்கிறது. அப்பொழுதுதான் அவள் அந்த வார்த்தையினால் சுத்திகரிக்கப்பட்டு, எஸ்தர் (Esther) எப்படி யேகாய் (Hegai) நியமித்த காரியமேயல்லாமல்



வேறொன்றையும் கேட்காமல் அகாஸ்வேரு ராஜாவுக்கு முன்பாக நின்றாளோ அதைப் போலவே கிறிஸ்துவுக்கு முன்பாக கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக நிற்கமுடியும் (a glorious church, not having spot or wrinkle, or any such thing (creeds, traditions) but that it should be holy and without blemish).

கிறிஸ்துவின் மணவாட்டி மனுஷனுடைய கோட்பாடு களினாலும், பாரம்பரியங்களினாலும், தீட்டுப்படாமல் இருக்க வேண்டுமென்றால், பரிபூரணமான வார்த்தை (Fullness of the Word) மணவாட்டிக்குத் திரும்ப அளிக்கப்படவேண்டும். அதற்காகத்தான் இந்தக் கடைசி கால எலியா அனுப்பப் பட்டிருக்கிறார். ஸ்தாபன உபதேசங்கள் குறைவான செய்தியாகவும், மனுஷனுடைய உபதேசங்களும் பாரம்பரியங் களுமாக இருக்கிறது. ஆனால், இந்த எலியா கொண்டுவருகிற செய்தி, ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு தேவரகசியத்தை வெளிப்படுத்துவதால் இது பரிபூரணமான வார்த்தையாக இருக்கிறது. இந்தப் பரிபூரணமான வார்த்தைதான் கிறிஸ்துவின் மணவாட்டியை அவருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்தும்.

இந்தச் செய்தி இயேசுகிறிஸ்துவின் பரிபூரண வெளிப்பாடாக இருக்கிறது. (The Perfect Revelation of Jesus Christ). இந்தப் பரிபூரணமான வார்த்தைதான் மணவாட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கான விசுவாசத்தைக் கொடுக்கும் (The Fullness of the Word gives Rapturing Faith to the Bride). இந்த வார்த்தைதான் மணவாட்டியைப் பூரணப்படுத்தும் (Perfection). இந்த வார்த்தைதான் மணவாட்டிக்கு அழியாமையைக் (Immortality) கொண்டுவரும்.

## 9. இந்தக் கடைசிகால எலியா யார்? (Who is the Endtime Elijah?):

இந்தக் கடைசிகால எலியா யார்? அவர் தான் **சகோ. வில்லியம் மரியன் பிரன்ஹாம் (William Marrion Branham) என்ற தீர்க்கதரிசி.** அவர் 1909ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6ம் தேதி, அமெரிக்காவில் உள்ள கென்டக்கி (Kentucky) என்ற இடத்தில் காலை 5 மணியளவில் பிறந்தார். அப்பொழுது நட்சத்திரம் போன்ற ஒரு வெளிச்சம் ஜன்னல் திறப்பு வழியாக வீசியது. அந்த ஒளியானது அந்த அறையைப் பலமுறை வட்டமிட்டுக் கொண்டு, குழந்தையின் படுக்கையின்மேல் நின்று, மஞ்சள் கலந்த பச்சை (Greenish Yellow) நிறத்தில் பிரகாசித்தது. பின்பு அந்த ஒளி வேகமாகச் சுழன்றபடி கூரையின் வழியாக கடந்து சென்று விட்டது. அவருடைய பிறப்பு விசேஷமானதென்பதை தேவன் காண்பித்தார். அவர்தான் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும் இந்தத் தீர்க்கதரிசியின் வாழ்க்கையில் மல்கியா 4:5,6; மத் 17: 11; லூக் 17:30; வெளி 10:6; வெளி 3:14; அப் 3: 20, 21; சகரியா 14: 7 போன்ற வேதவாக்கியங்கள் நிறைவேறின.

**உலக சரித்திரத்திலேயே சகோ. பிரன்ஹாமைப் போல இயேசுகிறிஸ்துவை அதிகமாய் உயர்த்தி மகிமைப் படுத்தினவர்கள் யாருமில்லை.** இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதை அவருடைய ஊழியம் உறுதிப்படுத்துகிறது (His ministry proved Jesus Christ is the same yesterday, today and forever). அவருடைய செய்திகள் ஏழு சபைக்காலங்களாக ஸ்தாபனத்தில் போதித்த தவறான உபதேசங்களை எடுத்துக் காட்டினதுமல்லாமல், சபையானது விசுவாசத்தை விட்டு வழுவிப்போவதற்குமுன் இருந்த மூல உபதேசங்களையும், ஆதி அப்போஸ்தலர்களுக்கு இருந்த விசுவாசத்தையும் திரும்பக் கொண்டு வந்தது. அதுவும் அல்லாமல், அவருடைய செய்திகள் வெளி 10: 6,7ல் சொன்னவண்ணமாக வேதத்தில் மறைந்திருக்கும் தேவ ரகசியங்களை வெளிப்படுத்தின. இந்தக் கடைசிகால மணவாட்டியின் விசுவாசத்தை ஆதி அப்போஸ்தலர்களுடைய விசுவாசத்திற்குத் திருப்பினது. இந்தத் தீர்க்கதரிசி, புறஜாதி மணவாட்டியை தேவனுடைய கலப்படமில்லாத தூய வார்த்தைக்குத் திருப்பி, அவளைக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்துகிறார்.



மல்கியா 3:1ல் சொல்லிய தீர்க்கதரிசனம் மத் 17: 12, 13; லூக் 1: 17; மாற்கு 1:2, 3; யோவான் 1: 23 போன்ற வசனங்களில் யோவான் ஸ்நானன் ஊழியத்தில் நிறைவேறினது. ஆனால், அப்பொழுது இருந்த ஸ்தாபனங்களில் ஒன்றாவது அவனை முன்னோடியாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவனை ஏற்றுக் கொள்ளாததால், தாங்கள் ஆவலோடு எதிர்ப்பார்த்திருந்த மேசியாவையும் ஏற்றுக்கொள்ளாமற் போனார்கள். **இந்தக் கடைசிகால எலியாவை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை நிச்சயமாகத் தவறவிடுவார்கள்.** மனுஷன் எப்பொழுதும் கடந்த காலத்தை நம்புவான், வரப்போகிறதையும் நம்புவான், ஆனால் தற்போது கண்முன் நடப்பதை மட்டும் காணத்தவறுகிறான். சரித்திரம் திரும்ப திரும்ப நிறைவேறும் (History repeats itself) என்று சொன்னாற்போல், இந்தக் கடைசி காலத்திலும் கிறிஸ்துவ ஸ்தாபனங்கள் தாங்கள் வாழும் காலத்தையும் அதன் செய்தியையும் காணத்தவறுகிறார்கள். தேவனுடைய எளிமையான வார்த்தையைத் தங்கள் ஸ்தாபனக் கண்ணாடிகள் மூலமாகப் பார்ப்பதால் அதை உணராமற் போகிறார்கள்.

இந்தக் கடைசிகால தீர்க்கதரிசி எலியாவின் ஆவியை உடையவராக இருப்பதால், யோவான் ஸ்நானன் எப்படி தன்னுடைய காலத்தில் இருந்த மதக்கோட்பாடுகளுக்கு ஒத்துப் போகவில்லையோ, அதைப்போலவே இவரும் ஸ்தாபன உபதேசங்களுக்கு விரோதமாகப் பேசினார். கோடரியானது வேர் அருகே வைக்கப்பட்டது போல இவருடைய செய்தியும், தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக இருக்கும் ஸ்தாபன உபதேசங்களை வேரறுத்தன. அதனால், ஸ்தாபனங்கள் அவரை வெறுக்கலாம். ஆனால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அவரை நேசிக்கிறார்கள்.

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை சகோ. வில்லியம் பிரன்ஹாமின் ஊழியத்தில் மிக வல்லமையாக வெளிப்படுத்தினது போல வேறு எந்த மனிதனின் ஊழியத்திலும் வெளிப்படுத்தவில்லை.**

நீங்கள் தேவனுடைய பட்சத்தில் இருக்கவேண்டும் அல்லது அவருக்கு விரோதமாக இருக்கவேண்டும். நீங்கள் பரிபூரணமான வார்த்தையை (Fullness of the Word) விவாகம் பண்ணவேண்டும் அல்லது மிருகத்தின் சொரூபமான (Image of the Beast) சபையின் கோட்பாடுகளோடு உங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். எப்பொழுதுமே பெரும் பான்மையினரின் கருத்து தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகவே இருக்கிறது. ஆனால், **தேவனே சத்தியபரர் என்றும் எந்த மனுஷனும் பொய்யன்** என்றும் வேதம் சொல்லுகிறது.

**சகோ. பிரன்ஹாம் "ஏழு சபைக்காலங்கள்" என்ற செய்தித் தொடரை முடிக்கும்போது, சபையில் இருந்த கரும்பலகையில் ஏழு சபைக்காலங்களின் படத்தை வரைந்திருந்தார். அப்பொழுது அக்கினி ஸ்தம்பம் தோன்றி அவர் வரைந்த படத்தைப் போலவே பின்னால் இருந்த சுவரில் வரைந்தது. அதற்குச் சாட்சியாக சுமார் முந்நூறு பரிசுத்தவான்கள் அப்பொழுது அந்தக் கூட்டத்தில் அமர்ந்திருந்தார்கள். தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை ஏதோ ஒரு மூலையில் அல்ல, அநேக சாட்சிகள் மத்தியில் உறுதிப்படுத்தினார்.**



அவரைக் கடைசிகால தீர்க்கதரிசியாக விசுவாசித்தாலும் விசுவாசிக்காவிட்டாலும் இந்தச் சந்ததி எந்தச் சாக்குபோக்கும் சொல்லமுடியாது. ஏனென்றால் தேவன் தம்முடைய தீர்க்கதரிசி மூலமாக அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும், இயற்கைக்கு மேம்பட்ட அநேக சம்பவங்களாலும் தம்மை வெளிப்படுத்தினார். இவ்விதமாய் தேவன் பின்மாற்றத் திலிருக்கும் சபையை மனந்திரும்புதலுக்கு அழைத்தாலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சிறு கூட்டமே விசுவாசிக் கிறார்கள்.

தீர்க்கதரிசியின் மூலமாக தேவன் அனுப்பின செய்தியை ஏற்றுக்கொள்ளும்படி, மனுஷரின் இருதயத்திலுள்ள இரகசியத்தை வெளிப்படுத்தும் வரத்தை தேவன் அவருக்குத் தந்திருக்கும்போது, நாம் இந்தச் செய்தியை ஏற்றுக்கொள்வது எவ்வளவு அவசியமாக இருக்கிறதென்று உணரவேண்டும். ஏனென்றால், கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு உங்களை அழைக்கும்படி அனுப்பப்பட்டச் செய்தியாக இது இருக்கிறது.

## 10. தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை உறுதிப் படுத்துதல் (God Vindicates His Prophet):

ஒரு தீர்க்கதரிசி தேவனால் அனுப்பப்பட்டால், அவர் தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறொன்றையும் போதிக்கமாட்டார். தேவன் அவரையும், அவருடைய செய்தியையும் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிப்படுத்தினார். கர்த்தர் அப்போஸ்தலர்களை ஒரு

செய்தியோடு அனுப்பும்போது, இயேசு அவர்களோடு கூட இருந்து **அவர்களால் நடந்த அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் வசனத்தை உறுதிப்படுத்தினார்** (மாற்கு 16:20). அவர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தீர்க்கதரிசிக்கு எப்படி வெளிப்படுத்தினார்? இக்காலத்திற்கென்று வாக்களிக்கப்பட்ட வசனத்தை எப்படி அவர் மூலமாக நிறைவேற்றினார்? என்பதைக் கீழே தொடர்ந்து படியுங்கள்.

## 1.கர்த்தருடைய தூதனானவரைச் சந்திப்பது (Meeting The Angel of the Lord):

மே மாதம் 7ம் தேதி, 1946ம் வருஷம் சகோ. பிரன்ஹாம் ஒரு குகையிலே அதிகாலை வேளையில் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, கர்த்தருடைய தூதனானவர் (Angel of the Lord) அவருக்குத் தரிசனமாகி, **“நீ பயப்படாதே. நான் தேவனுடைய சமூகத்திலிருந்து அனுப்பப்பட்டத் தூதனாக இருக்கிறேன். உன்னுடைய வாழ்க்கையைக் குறித்து நீ குழம்பிக் கொண்டிருக்கிறாய். உன்னுடைய வாழ்க்கை விநோதமாக இருக்கிறது. உனக்கு அடிக்கடி தரிசனங்கள் வருகிறது. நான் உனக்கு அதைப்பற்றிச் சொல்ல வந்திருக்கிறேன். நீ உலகமெங்கிலும் தெய்வீக சுகமளிக்கும் வரத்தைக் கொண்டு செல்வாய். நீ உத்தமமாக இருப்பாயென்றால், ஜனங்களை உன்னை நம்பப்பண்ணுவாயென்றால், உன் ஜெபத்திற்கு முன்பாக எதுவும் நிற்க முடியாது, கேன்சர் வியாதிக்கூட நிற்காது”** என்று சொன்னார் (You are sent to take a gift of divine healing to the people of the world. If you will be sincere and can get the people to believe you, nothing shall stand before your prayer, not even cancer). அந்தச் சுகமளிக்கும் வரம் ஆயிரக்கணக்கான அற்புதங்களால் உறுதியாக்கப்பட்டது.



அமெரிக்காவில், கனடாவில், ஆப்பிரிக்காவில் (America, Canada, Africa) மற்றும் உலகமெங்கிலும் அவர் ஊழியத்தைச் செய்யும்போது, ஆயிரக்கணக்கான அற்புதங்கள் நடந்தது. குருடர்கள் பார்வை அடைந்தார்கள். செவிடர்கள் சுகமானார்கள். ஊனமுற்றவர்கள், இன்னும் பலவிதமான வியாதிகளில் இருந்த எல்லோருமே சுகமடைந்தார்கள். லட்சக்கணக்கான சாட்சிகள் இருக்கிறது.

**இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார், அவர் அன்றைக்குச் செய்த அற்புதங்களை இன்றைக்கும் செய்வார் என்பது இந்தத் தீர்க்கதரிசி ஊழியத்தில் உறுதியாக்கப்பட்டது. உலகமெங்கும் ஏழுமுறை சுற்றி அவர் பிரசங்கம் செய்தார்.**

தென் ஆப்பிரிக்காவில், டர்பன் (Durban, South Africa) என்ற இடத்தில் பிரசங்கம் பண்ணும்போது, சுமார் ஒரு லட்சம்பேர் வந்திருந்தார்கள். அவர் சுகமாக்குதலுக்காக ஜெபித்தபோது, இதோ, கட்டைகளை (Crutches) ஊன்றி நடந்து வந்தவர்களெல்லாம் கட்டையைப் போட்டுவிட்டு நடந்து போனார்கள். அந்தக் கட்டைகள், மற்றும் சக்கர நாற்காலிகள் ஆகியவற்றை **ஏழு பாரவண்டிகளில் (Truck) ஏற்றும் அளவுக்கு அவ்வளவுபேர் சுகமானார்கள்.** அங்கே ஒரு பிச்சைக்காரன் இருந்தான். அவன் உடம்பு பாதிக்கப்பட்டு, நிமிர்ந்து நிற்கமுடியாமல் நாலுகாலில் நடக்கிறான். ஒரு நாயைப்போல அவன் கழுத்தில் சங்கிலியைப்போட்டு அவனை அழைத்துக் கொண்டு போவார்கள். இவ்விதமாக அவன் தெருவில் இருக்கிறான். எல்லோருக்குமே அவனை நன்றாகத் தெரியும். அப்பொழுது, சகோ. பிரன்ஹாம் தரிசனம் கண்டு, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அவன் எழுந்து நடக்கப்போகிறான் என்று சவாலாகச் சொன்னார். ஜனங்களும், அந்த மனிதன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் சுகமானால்,

இயேசுவே தேவன் என்று ஒப்புக்கொள்வதாகக் கூறினார்கள். அவர் ஜெபித்த உடனே, அந்த மனிதன் நேராக நிமிர்ந்து நின்றான். பேச முடியாதவனாக இருந்த அவன் பேசினான். ஒரு இயல்பான மனுஷனாக அவன் மாறிவிட்டான். எத்தனையோ வருஷங்கள் ஒரு நாயைப்போல நடந்த அவனுக்கு நல்ல சுகம் கிடைத்தது. **முப்பதாயிரம் பேர் அன்றைக்குக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். (30,000 People surrendered their lives to the Lord Jesus that night).**

சகோ. பிரன்ஹாம் பின்லாந்து (Finland) என்ற நாட்டிற்குப் போகும்போது, அங்கே மரித்துப்போன ஒரு பையனை உயிரோடு எழுப்பினார். அவர் இரண்டு வருஷங்களுக்கு முன்பே ஒரு தரிசனம் கண்டிருக்கிறார். அத்தரிசனத்தில் விபத்தில் சிக்கி சாலையில் மரித்துக் கிடந்த ஒரு சிறுவன் உயிரோடு எழுந்திருப்பதாக அவர் பார்த்தார். தன்னுடைய சபையாரிடம் தங்கள் வேத புஸ்தகத்தின் பின் அட்டையில் அதைக் குறித்துவைக்கும்படிச் சொல்லியிருந்தார். இப்பொழுது, பின்லாந்துக்குப் போகும்போது, அவர் தரிசனத்தில் கண்டவிதமாகவே, அங்கே ஒரு சிறுவன் சாலையில் செத்துக் கிடந்தான். அப்பொழுது சகோ, பிரன்ஹாம், “இன்னும் ஐந்து நிமிடத்தில் இந்தச் சிறுவன் காலூன்றி நிற்கவில்லையென்றால், நான் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி என்று கூறி என்னைப் பின்லாந்தை விட்டே நீங்கள் துரத்தலாம். ஆனால், அவன் உயிரோடு எழுந்து நின்றால், நீங்கள் உங்களுடைய வாழ்க்கையைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்”. என்று சொன்னார். **அவர் ஜெபித்தவுடனே அந்தச் சிறுவனுக்கு உயிர் திரும்ப வந்தது. அவன் முற்றிலும் இயல்பு நிலைக்கு வந்தான். அல்லேலூயா.**



## 2.வானத்திலிருந்து உண்டான சத்தம் அவரை உறுதிப்படுத்தியது (Voice From Heaven Vindicated The Prophet):

கர்த்தருடைய தீர்க்கதரிசி, 1933ம் வருடம் ஜீன் மாதத்தில் சில நாட்கள் எழுப்புதல் கூட்டத்தை நடத்தினார். அப்பொழுது அந்தக் கூட்டத்தின் முடிவில் சுமார் ஐந்நூறு பேர் மனந்திரும்பி, சத்தியத்தை விசுவாசித்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள ஒப்புக்கொடுத்தனர். அவர்களுக்கு ஜெபர்சன்வில் (Jeffersonville), ஸ்பிரிங் தெரு (Spring Street) அருகில் உள்ள ஓகியோ (Ohio) என்ற நதியில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தார். சுமார் நாலாயிரம் பேர் நதியின் கரையில் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த நதியில் மார்ஜி (Margie) என்ற ஒரு அழகான வாலிபப் பெண், நீச்சல் உடையை அணிந்து கொண்டு ஒரு படகில் அமர்ந்திருந்தாள். அவள் ஒரு ஸ்தாபன சபையில், ஞாயிறு சிறுவர் பள்ளி ஆசிரியையாயும் இருந்தாள். சகோதரன் பிரன்ஹாம் அந்தப் பெண்ணிடம் கொஞ்சத் தூரம் தள்ளி படகைக் கொண்டு போகும்படிச் சொன்னார். அவளோ மறுத்துவிட்டாள். அப்பொழுது அவர் “நீ போகமாட்டாய், ஆனால் நான் பிரசங்கிக்கிற சுவிசேஷம், உன்னை ஞானஸ்நானம் கொடுக்கிற இந்த இடத்திலிருந்து தூரக் கொண்டு போக முடியும்” என்று சொன்னார். அப்பொழுது அந்தப் பெண், தீர்க்கதரிசியைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்தாள். ஏனெனில், அந்தப் பெண்ணுக்கு ஞானஸ்நானத்தின்மேல் நம்பிக்கையில்லை. அவர் பதினேழாவது நபருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் போது, வானத்திலிருந்து ஒரு வெளிச்சம் தோன்றி, சகோதரன் பிரன்ஹாமின் மேல் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு சத்தம்

பிறந்தது. அது **“கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல என்னுடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடி யாக நீ ஒரு செய்தியோடு அனுப்பப்படுகிறாய்”** (As John the Baptist was sent forth to forerun the First Coming of Christ, You’re sent forth with a message to forerun the Second Coming of Christ”) என்று சொன்னது.

“ஒரு ஊழியர் ஞானஸ்நானம் கொடுக்கும்போது மர்மமான வெளிச்சம் அவர் மேல் தோன்றினது” (Mystic Light appears over a local minister while baptizing) என்ற தலைப்பில் செய்தித்தாளிலும் பிரசுரிக்கப்பட்டது. இந்தக் காட்சியைக் கண்டவர்கள் அதிர்ச்சியினால் சோர்ந்து போனார்கள். சிலர் பயந்து ஓடினர். சிலர் முழங்கால் படியிட்டு தேவனைத் தொழுது கொண்டனர். அப்பொழுது மார்ஜி என்ற அந்தப் பெண், பயந்து தன் படகை முன்னோக்கி தள்ளிச் சென்றாள். சகோதரன் பிரன்ஹாம் சொன்னபடி கர்த்தர் அவளை அந்த இடத்தை விட்டு அகலச் செய்தார். **தேவனுடைய வார்த்தையை அவமதித்த அந்தப் பெண்ணிற்குச் சில நாட்களுக்குப்பின் பைத்தியம் பிடித்து, பைத்தியக்கார மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.**

தேவனுடைய வார்த்தையோடு விளையாடக் கூடாது என்பதை இந்தச் சம்பவத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது. தேவனுடைய வார்த்தை எப்பொழுதும் தீர்க்கதரிசியினிடத்தில் தான் வருகிறது (The Word of God always comes to the Prophet). பவுல் தமஸ்கு பட்டணத்திற்குப் போகும் வழியில் ஒரு வெளிச்சம் தோன்றி, அதிலிருந்து இயேசு பேசினது போலவே, சகோதரன் பிரன்ஹாமோடும் இயேசுகிறிஸ்து வெளிச்சத்திலிருந்து பேசி வசனத்தை உறுதிப்படுத்தி இருக்கிறார்.



## 3.அக்கினி ஸ்தம்பத்தினால் உறுதிப்படுத்தப் பட்டவர் (Vindicated by the Pillar of Fire):

தேவன் மோசேயையும், பவுலையும் அக்கினி ஸ்தம்பத்தின் மூலம், அவர்கள் கர்த்தரால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் என்பதை உறுதிப்படுத்தினார். அது போலவே, சகோதரன் பிரன்ஹாமும் தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை அக்கினி ஸ்தம்பத்தினால் எப்படி உறுதிப்படுத்தினார் என்பதைத் தொடர்ந்து படியுங்கள். சகோதரன் பிரன்ஹாமின் குணமாக்கும் ஊழியத்தை, பெஸ்ட் (Mr. Best) என்ற போதகர் மிகவும் எதிர்த்தார். அவருக்குத் தெய்வீகச் சுகத்தில் (Divine Healing) நம்பிக்கை இல்லை. அவர் தெய்வீகச் சுகத்தைக் குறித்து வாதம் நடத்த சகோதரன் பிரன்ஹாமைச் சவாலுக்கு அழைத்தார். சகோதரன் பிரன்ஹாம் வாக்குவாதம் பண்ணுவது நல்லதல்ல (1 கொரி 11:16) என்று, அந்தச் சவாலைச் சந்திக்க முன்வர வில்லை. ஆனால் அவரோடு உடன் ஊழியம் செய்த, அவருடைய நண்பர் டாக்டர் பாஸ்வொர்த் (Dr. Bosworth) அந்தச் சவாலைச் சந்திக்க முன்வந்தார். அவர் சகோதரன் பிரன்ஹாமிடம் “வார்த்தையைத் தவிர வேறொன்றும் பேசமாட்டேன்” என்ற உறுதிமொழி சொல்லிவிட்டு கூட்டத்திற்குச் சென்றார்.

1950ம் வருடம் ஜனவரி மாதத்தில் அமெரிக்காவிலுள்ள ஹவுஸ்டான், டெக்சாஸ் (Houston, Texas) என்ற இடத்தில் அந்தக் கூட்டம் நடந்தது. சுமார் முப்பதாயிரம் பேர் அதில் பங்கு பெற்றனர். போதகர் பெஸ்ட் தெய்வீக சுகம் என்பது இல்லை என்று மிக ஆவேசமாகப் பேசினார். பின்பு போதகர் பாஸ்வொர்த் தெய்வீகச் சுகம் வேதப் பூர்வமானது என்று வேதத்திலிருந்து அநேக வசனங்களைக் காண்பித்தார். சகோதரன் பிரன்ஹாம்

கூட்டங்களில் சுகம் பெற்றவர்கள் எத்தனை பேர்; அவர்கள் எழுந்து நிற்கலாம் என்று அவர் சொன்னபோது, நூற்றுக் கணக்கானவர்கள் எழுந்து நின்றனர். அந்தக் கூட்டத்திற்கு சகோதரன் பிரன்ஹாம் போகக்கூடாது என்று தீர்மானித் திருந்தார். ஆனால் கர்த்தருடைய ஆவியானவர் அங்கே போகும்படி ஏவினார். எனவே அவர் பாதிக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, அங்கு வந்து பால்கனியில் அமர்ந்திருந்தார்.

பின்பு அந்த பெஸ்ட் என்ற போதகர் பாஸ்வொர்த்தின் முகத்தில் குத்துவது போலக் கையசைத்துப் பேசினார். அவர் டக்ளஸ் ஸ்டுடியோ மூலமாக தான் பேசுவதைப் போட்டோ எடுக்க ஒழுங்கு செய்திருந்தார். ஜேம்ஸ் அயர் (James Ayers) என்ற ஒரு யூதனும், டெட் கிப்பர்மன் (Ted Kipperman) என்ற கத்தோலிக்க சபையைச் சேர்ந்தவரும் போட்டோ எடுத்தனர். முடிவில் அந்தப் போதகர் பாஸ்வொர்த் "சகோதரன் பிரன்ஹாம் இங்கு இருந்தால், அவர் மேடைக்கு வந்து சிறிது நேரம் பேசும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று கூறினார். உடனே சகோதரன் பிரன்ஹாம் மேடைக்குச் சென்றார். அவர் இவ்விதமாகப் பேசினார். "நான் போதகர் பெஸ்ட்க்கு விரோதி அல்ல. அவர் மேல் எனக்கு எந்த மனஸ்தாபமும் இல்லை. அவர் சொல்லுகிறபடி, நான் தெய்வீகச் சுகமளிப்பவர் என்று என்னை ஒரு போதும் சொல்லிக் கொண்டதில்லை. இயேசுகிறிஸ்து ஒருவர் மாத்திரமே சுகமளிப்பவர். அவர் என்னை அற்புதங் களோடும் அடையாளங்களோடும் அனுப்பியிருக்கிறார். **நான் சொல்லுகிறது சத்தியமாயிருக்குமானால், தேவன் அதைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்" என்று கூறி முடித்தவுடன், பெருங்காற்றின் இரைச்சல் போல ஒரு சத்தம் கேட்டது.** உடனே டக்ளஸ் ஸ்டுடியோகாரர் அவரைப் போட்டோ எடுத்தனர். அதுதான் அவர்கள் எடுத்த கடைசி படம்.



அன்று இரவில், ஜேம்ஸ் அயர் என்ற அந்த போட்டோ கிராபர் இருட்டறையில் பிலிம்மை எடுத்து நெகட்டிவ்வைப் (negative) பார்க்கும்போது, ஒரு நெகடிவ் தவிர மற்ற அனைத்தும் படம் விழாமல் காலியாக (blank) இருந்தது. கடைசியாக எடுத்தப் படம் மாத்திரம் சரியாக இருந்தது. அதில் சகோதரன் பிரன்ஹாம் தலைக்குமேல் இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிச்சம் (Supernatural Light) காணப்பட்டது. அது அக்கினிஸ்தம்பம். உடனே அந்த போட்டோகிராபர் மற்றவர்களுக்கு ஆச்சரியத்தோடு காண்பித்தார்.

காலையிலே அந்த நெகடிவ், இரகசிய தஸ்தாவேஜு களைக் கவனிக்கும் அரசாங்க அதிகாரி ஜியார்ஜ் லேசி (George Lacy, Examiner of Questioned Documents) என்பவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர் அதைப் பல மணி நேரங்கள் தன்னுடைய பரிசோதனைக் கூடத்தில் சோதித்து, இந்த நெகடிவ் உண்மையானது. உண்மையில் வெளிச்சமானது நெகடிவில் பதிவாயிருக்கிறது. மேலும் அவர் "உலக சரித்திரத்தில் முதன் முதலாக இயற்கைக்கு அப்பாற்பட்டவர் படமெடுக்கப்பட்டிருக்கிறார்" ("Because it's the first time in all the world's history that a supernatural Being was ever photographed") என்று அறிக்கை எழுதி கையெழுத்திட்டார்.

அந்தப் படம் வாஷிங்டனில், அமெரிக்க பாராளுமன்றக் கட்டடத்திலுள்ள, ஹால் ஆப் பேம் என்ற அறையில் இன்றும் தொங்கிக் கொண்டிருக்கிறது (And now it hangs in Washington, DC, in the Hall of Fame). ஆகவே **தேவனே தம்முடைய தீர்க்கதரிசியுடன் காட்சியளித்து, அவரை உறுதிப் படுத்திக் காண்பித்திருக்கும்போது அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்று நம்புவதற்கு நாம் ஏன் தயங்க வேண்டும்?**

## 4. மேகஸ்தம்பத்தினால் உறுதியாக்கப்பட்டிருக்கிறார் (Vindicated by The Pillar of Cloud):

1963ம் வருடம் பிப்ரவரி மாதம் 28ம் தேதி சகோதரன் பிரன்ஹாம், சில நண்பர்களோடு கூட அமெரிக்காவிலுள்ள சூரிய அஸ்தமன மலையில் (Sunset Mountain) இருந்தார். திடீரென்று ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அவர் திரும்பிப் பார்த்தபோது, நித்தியத்திலிருந்து ஏழு தூதர்கள் மின்னல் வேகத்தில் இறங்கி வந்தார்கள். அந்தக் காட்சி ஒரு வெண் மேகமாக இருந்தது. அந்த மேகம் இருபத்தாறு மைல் உயரத்தில், முப்பது மைல் பரப்பளவு உடையதாயிருந்தது. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அந்த மேகத்திற்குள்ளாக சகோதரன் பிரன்ஹாம் எடுத்துக் கொள்ளப்பட்டார். **அந்த மேகத்தின் போட்டோ, லைப் பத்திரிக்கையில் 1963ம் வருடம் மே 17ம் தேதி பிரதியில் (Life Magazine, 17th May 1963) "மர்மமான மேகம் தோன்றினது" (Mysterious Cloud Appeared) என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.**

அந்தப் படத்தை வலதுபுறமாகத் திருப்பினால் இயேசு கிறிஸ்துவின் முகம் போல் காணப்படுகிறது. **அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது. அவருடைய கண்கள் அக்கினி ஜீவாலைப் போலிருந்தது** (வெளி 1:14) என்ற வார்த்தை நிறைவேறியிருக்கிறது. அப்பொழுது தேவன் அந்த மேகத்திலிருந்து "நீ புறப்பட்டு வந்த இடமாகிய ஜெபர்சன்வில்லுக்குத் திரும்பிப் போ, ஏழு முத்திரைகளின் ஏழு இரகசியங்கள் திறக்கப்படும்" என்று கூறினார் ("Return back to Jefersonville from where you come from for the Seven Seals of the Seven mysteries will be opened").



அவர், 1963ம் வருடம் மார்ச் மாதம் 17ம் தேதி முதல் 24ம் தேதி வரை, ஒரு சிறிய அறையில் காத்திருந்து ஏழு முத்திரைகளைக் குறித்து பிரசங்கம்பண்ண, வேதத்தைத் தியானித்துக் கொண்டிருந்தபோது, அவர் மேகத்தில் சந்தித்த ஒவ்வொரு தூதனும் ஒவ்வொரு நாள் வந்து (each angel came each day) லூத்தர், வெஸ்லி, பெந்தெகொஸ்தேயினர் காலத்தில் விடுபட்டுப் போன வேதத்தில் மறைந்திருக்கிற அனைத்துச் சத்தியங்களையும் வெளிப்படுத்தினர். ஆட்டுக்குட்டியானவராகிய கிறிஸ்து ஏழு முத்திரைகளை உடைத்தார். அந்த இரகசியங்களை ஏழாம் தூதனுக்கு வெளிப்படுத்தினார். ஏழாம் தூதன் அதைச் சபைக்கு வெளிப்படுத்தினார். **"சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன்" (வெளி 22:16). "இனி காலம் செல்லாது; ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்க தரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தப்படி ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிற போது தேவரகசியம் நிறைவேறும்"** (வெளி 10:6) என்ற வேதவாக்கியங்கள் நிறைவேறிவிட்டது.

## 5. இந்தியாவில் பலப்பரீட்சை (Showdown in India):

1954ம் வருடம், செப்டம்பர் மாதம் நாலாவது வாரத்தில் சகோதரன் பிரன்ஹாம் இந்தியாவிலுள்ள பாம்பே நகரத்திற்கு (Bombay) வந்தார். பல சபையைச் சார்ந்த கிறிஸ்தவத் தலைவர்கள் அவரை வரவேற்றனர். அப்பொழுது இந்தியாவிலுள்ள மெத்தடிஸ்ட் சபையின் ஆர்ச் பிஷப் சகோதரன் பிரன்ஹாமைப் பார்த்து: "மிஸ்டர் பிரன்ஹாம், நீங்கள் ஒரு மிஷனரியாக இங்கு வரவில்லை என்று நம்புகிறேன். அமெரிக்கர்களாகிய நீங்கள் எல்லாரும் பைபிளை அறிந்திருக்கிறதைக் காட்டிலும், நாங்கள் அதிகமாக பைபிளை அறிந்திருக்

கிறோம். ஏனெனில் பைபிள் ஒரு கிழக்கத்திய புத்தகம், பரிசுத்த தோமா 1900 வருடங்களுக்கு முன்பே இங்கு வந்து சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணியிருக்கிறார்; தேவன் உமக்கு ஒரு வரத்தைக் கொடுத்திருக்கிறார் என்றும், அந்த வரம் பைபிளை மறுபடியும் ஜீவனுள்ளதாகச் செய்யும் (makes the Bible live again) என்றும் நாங்கள் கேள்விப்பட்டோம்" என்றார். அதற்குச் சகோதரன் பிரன்ஹாம் நிச்சயமாகவே உம்முடைய ஜனங்களாகிய இந்தியர்களுக்கு, இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதை நான் காண்பிக்க விரும்புகிறேன் என்று பதிலளித்தார்.

**சகோதரன் பிரன்ஹாம் பாம்பேயிலுள்ள தாஜ் ஓட்டலில் தங்கியிருக்கும்போது, பாம்பே மேயர் அவரை விருந்துக்கு அழைத்தார். அந்த விருந்து உபசரிப்பில் பல அரசாங்க அதிகாரிகளும் நமது பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு (Jawaharlal Nehru) அவர்களும் பங்குபெற்றிருந்தனர்.** விருந்து உண்ணும்போது பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் சகோதரன் பிரன்ஹாமைப் பார்த்து "மிஸ்டர் பிரன்ஹாம், நீங்கள் சுகவீனமாக இருப்பதாகத் தெரிகிறது" என்றார். சகோதரன் பிரன்ஹாம் ஓட்டலுக்குத் திரும்பும்போது, பிரதமர் நேருவின் தனிப்பட்ட டாக்டர் (Personal Physician) அவரைப் பரிசோதிப்பதற்காகக் காத்திருந்தார். டாக்டர் அவரைப் பரிசோதித்து "உங்களுடைய இரத்த அழுத்தம் ஆபத்தான நிலையில் குறைந்திருக்கிறது. இந்த நிலையில், நீங்கள் எப்படி உயிரோடிருக்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. நீங்கள் எவ்வளவு சீக்கிரம் அமெரிக்கா போக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் போய், அங்குள்ள டாக்டரைப் பார்த்து உடம்பை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள்" என்று உங்களுக்கு ஆலோசனைச் சொல்லுகிறேன் என்று கூறினார். அதற்கு அவர் எனக்கு இங்கு பாம்பேயில், இரண்டு கூட்டங்கள் உண்டு. அதன்பின்பு நான் நேராக வீட்டிற்குச் செல்வேன் என்று பதிலுரைத்தார்.



முதல் நாள் கூட்டம், மிகப்பெரிய எபிஸ்கோபல் சபையில் (Episcopal church) நடந்தது. சகோதரன் பிரன்ஹாம் உலகப் புகழ் பெற்ற சுவிசேஷகரானபடியால், சுமார் ஐந்து லட்சம் பேர் **(5,00,000)** அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கூட்டம் அதிகமாக இருந்தபடியால், சபையைச் சுற்றியிருந்த தெருக்களில் எல்லாம் ஒலி பெருக்கி பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் சகோதரன் பிரன்ஹாம் இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார், அவர் அன்றைக்குச் செய்த அதே அற்புதத்தை இன்றைக்கும் செய்ய வல்லவராயிருக்கிறார் என்று திட்டவட்டமாகப் பேசினார்.

ஜெப வரிசையில் வந்த ஒவ்வொருவரும் யார் என்றும், அவர்களுடைய பிரச்சனை என்னதென்றும் கூறி அவர்களுக்காக ஜெபம் செய்தார். அவர்களுடைய பெயரை அவர் உச்சரிக்கக் கூடாதபடியால், அவர்களின் பெயரின் எழுத்துக்களைச் சொன்னார். அவர் சொன்ன அனைத்தும் முற்றிலும் உண்மையாயிருந்தது. திரளான வியாதியஸ்தர்கள் சுகமானார்கள். அநேக அற்புதங்கள் நடந்தது. அடுத்த நாள் இந்தியாவிலுள்ள 16 மதங்களைச் சார்ந்த, அதின் மதத் தலைவர்கள் சகோதரன் பிரன்ஹாமைச் சந்தித்தனர். ஒரு ஜெயின் ஆலயத்திற்கு அவரை அழைத்துச் சென்று அங்கு தங்கள் தெய்வங்களைக் குறித்துப் புகழ்ச்சியாகப் பேசினர். அவர்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்தும், கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறித்தும் பல கேள்விகளை அவரிடம் கேட்டனர். சகோதரன் பிரன்ஹாம் வேதத்தின்படி அவர்களுக்குச் சரியான பதிலைக் கொடுத்தார். பின்பு சகோதரன் பிரன்ஹாம் அவர்களைப் பார்த்து: "கிறிஸ்தவ மிஷனரிகள் (Christian Missionaries) இயேசுகிறிஸ்துவை உங்களுக்கு, பைபிள் உபதேசங்கள் அடங்கிய கைப்பிரதிகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் மற்றும் அனாதை ஆசிரமங்கள் மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவையெல்லாவற்றையும் நான் ஆதரிக்கிறேன். ஆனால்

இன்னும் உங்களுக்கு, இயேசுகிறிஸ்து பரிபூரணமாக வெளிப்படுத்தப்படவில்லை. இன்று இரவில் நடக்கும் என்னுடைய கூட்டத்திற்கு நீங்கள் வருவீர்களென்றால், இயேசுகிறிஸ்துவை, அவருடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் (Supernatural Power) காணலாம்" என்று சொன்னார். ஆச்சரியப்படும் வண்ணமாக, அவர்கள் அனைவரும் கூட்டத்திற்கு வருவதாகச் சம்மதம் தெரிவித்தனர்.

அன்று மாலை நேரக் கூட்டத்திற்கு, பிரசங்க பீடத்திற்கு முன், நாலு வரிசை போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. காலையில் ஜெயின் ஆலயத்தில் சந்தித்த, அனைத்து மதத் தலைவர்களும் முதல் வரிசையில் அமர்ந்திருந்தனர். சகோதரன் பிரன்ஹாம் இயேசுகிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைக் குறித்துத் தெளிவாகப் பிரசங்கம் பண்ணினார். ஜெப வரிசையில் வந்த வியாதிக்காரர்களுக்கு ஜெபம் செய்யும்போது அனைவரும் சுகம் பெற்றனர். அப்பொழுது ஒரு குருடன் ஜெபத்திற்கு வந்தான். அவனுடைய கண்கள் முற்றிலும் வெள்ளையாக இருந்தது. சகோதரன் பிரன்ஹாம் அவன் சுகம் பெறுவதை ஏற்கனவே தரிசனத்தில் (Vision) கண்டிருக்கிறார். அவர் கண்ட தரிசனம் ஒவ்வொன்றும் பிழையின்றி நிறைவேறி வந்தன. இதுவே தீர்க்கதரிசியின் அச்சமற்ற நம்பிக்கைக்குக் காரணம். அந்தக் குருடன் யாரென்றும், அவன் எங்கு வசிக்கிறான் என்றும், சூரியனை அவன் தெய்வமாக ஆராதிப்பதால், அவன் அதையே உற்றுநோக்கிக் கொண்டிருந்ததின் விளைவாகக் குருடனானான் என்றும் தரிசனத்தில் கண்டார். அங்கிருந்த அஞ்ஞான பூசாரிகள் ஒவ்வொருவரிடமும் அவர்: "உங்கள் தெய்வம் உண்மையான தேவனானால், இங்கு வந்து இம் மனிதனின் கண்களைத் திறவுங்கள் பார்க்கலாம். அப்பொழுது நாங்கள் சாஷ்டாங்கமாக விழுந்து உங்கள் தெய்வத்தைப் பணிந்துகொள்வோம்" என்று சவால் விடுத்தார். ஆனால் ஒருவரும் முன் வரவில்லை. **அவர் தொடர்ந்து என் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உண்மையான தேவனாயிருந்து, இம்மனிதனின் கண்களைத் திறந்தா ரானால், வல்லமையற்ற உங்கள் தெய்வங்களைப் புறக்கணித்து இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வீர்களா? என்று வினவினார். அவர்கள் இணங்கினார்கள். தீர்க்கதரிசி ஜெபித்தபோது அவன் கண்கள் திறக்கப்பட்டது.** உடனே ஜனங்கள் மத்தியில் பெரிய எழுச்சி ஏற்பட்டு, சுகம் பெறுவதற்காக சகோதரன் பிரன்ஹாமைத் தொடவேண்டுமென்று எண்ணி, அந்த ஜனக்கூட்டம் தள்ளிக்கொண்டு முன்வந்தது. இவ்விதமாக கர்த்தர், தம்முடைய தீர்க்கதரிசி மூலமாக அற்புதங்களைச் செய்து இந்தியாவில் தமது நாமத்தை மகிமைப்படுத்தினார். அவர் தேவனால் அனுப்பப்பட்ட கடைசி கால தூதன் என்றும், அவருடைய செய்தி தேவனால் அருளப்பட்டது என்பதும் உறுதியாக்கப்படுகிறது.



## 6. சிக்காகோவில் போதகர்கள் மத்தியில் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியை உறுதிப்படுத்துதல் (Lord Vindicated His Prophet in the midst of Chicago Ministers):

அமெரிக்காவிலுள்ள சிக்காகோ என்ற பட்டணத்தில் சுமார் நானூறு போதகர்கள், சகோதரன் பிரன்ஹாமின் உபதேசங்களைக் குறித்து, கேள்வி கேட்டு, அவரைக் கண்ணியில் சிக்கவைத்து அவரை அவமானப்படுத்த வேண்டுமென்று எண்ணினர். ஆனால் அவர்களே கண்ணியில் சிக்கி வெட்கப்படும்படி கர்த்தர் கிரியை செய்தார். இந்தச் சம்பவத்தைச் சகோதரன் பிரன்ஹாமே விளக்கிச் சொல்லுவதைப் படியுங்கள். "சிக்காகோவில் என்ன நடந்ததென்று பாருங்கள். மூன்று போதகர்கள் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் என்ன செய்யப் போகிறார்களென்று கர்த்தர் அன்றிரவே

முன்னறிவித்தார். அவர்கள் எனக்குக் கண்ணி வைத்திருந்தனர். நான் அங்கு சென்றேன். நான் சகோ. கார்ல்ஸனிடம், நீங்கள் இந்தக் கூட்டத்தை இந்த ஓட்டலில் நடத்தப் போவதில்லை. நீங்கள் வேறொரு இடத்திற்கு அதை அமைக்க வேண்டியிருக்கும். அது பச்சை நிறம் கொண்ட அறையாயிருக்கும். அவர்கள் எனக்கு ஒரு கண்ணி வைத்திருக்கின்றனர். இல்லையா, சகோ. கார்ல்ஸன் (Carlson)? என்றேன். அவர் வெட்கி தலை குனிந்து கொண்டார். நான், அவர்கள் எனக்கு ஒரு கண்ணி வைத்திருக்கின்றனர், சகோ. கார்ல்ஸ்னே, நீங்களும் டாமி ஹிக்ஸும் (Tommy Hicks) அதை என்னிடம் கூற ஏன் பயப்பட்டீர்கள்? என்றேன். அவர்கள் இருவரும் வெட்கி தலை குனிந்து கொண்டனர். நான் "டாமி, ஏன் பேசமாட்டேன் என்கிறீர்" என்றேன். அவர், என்னால் பேசமுடியவில்லை என்றார். நான், நீங்கள் எனக்கு உதவி செய்யப்போவதாகக் கூறினதாக நினைத்தேன்.

கடந்த இரவு கர்த்தர் என்னிடம், "இன்று நீ அங்குச் செல்லும்போது, அந்தக் கட்டிடம் அவர்களுக்குக் கிடைக்க வில்லை என்பதைக் காண்பாய். நீ வேறொரு கட்டிடத்தில் இருப்பாய். டாக்டர் மீட் இந்தப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பார். பாடல்களைப் பாடும் அந்தக் கறுப்பு மனிதனும் அவருடைய மனைவியும் இங்கு உட்கார்ந்து கொண்டிருப்பார்கள் என்று கூறினார். அவர் புத்த மதத் தலைவர் ஒருவர் இங்கு உட்கார்ந்து கொண்டிருப்பார் என்றார்" என்றேன். நான் அவர்களிடம், "இது உண்மையாவென்று பாருங்கள், நான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதால் அவர்கள் எனக்கு விரோதமாய் இருக்கின்றனர். நான் சர்ப்பத்தின் வித்தைப் பிரசங்கிப்பதால், அந்நிய பாஷையில் பேசும் ஒவ்வொரு மனிதனும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார் என்பதற்கு எதிரான அத்தாட்சியை நான் காண்பிப்பதால், மற்றும் அநேக காரியங்களின் பேரில் அவர்கள் எனக்கு விரோதமாயிருக்கின்றனர். நீங்கள் அங்கு வந்து, தேவன் செய்வதைப் பாருங்கள்" என்றேன்.



அவர்கள் அங்குச் சென்றபோது, அதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பு, அல்லது இன்னும் சற்று முன்பு, அந்தப் பிற்பகலில் ஓட்டல் நிர்வாகிகள் சகோ.கார்ல்ஸனை வரும்படியாகக் கூறினர். வாடகைக்கான முன்தொகையை வாங்கினவர் அவரிடம், இதை நாங்கள் ரத்து செய்ய வேண்டும். ஏனெனில், எங்கள் மேலாளர் இந்த இடத்தை இன்று காலை ஒரு இசைக்குழுவுக்கு அளிப்பதாக வாக்களித்துவிட்டார் என்றார்.

ஆகவே, அவர்கள் அந்த டவுன் அண்ட் கண்ட்ரீ (Town and Country) உணவகத்திற்குச் சென்றார்கள். அக்காலையில் அவர்கள் உள்ளே சென்ற போது, சகோதரன் கார்ல்சன்: "ஒரு காரியம் உண்டு. சகோதரராகிய நீங்கள் சகோதரன் பிரன்ஹாமுடன் ஒத்துப்போகாமல் இருக்கலாம். ஆனால் ஒன்று, தான் விசுவாசிப்பதைக் கூறுவதற்கு அவருக்குப் பயமே கிடையாது" என்றார். மேலும் அவர், "இவை இப்படியாக நடக்கும் என்று அவர் கூறின விதமாக சரியாக அப்படியே தான் இருக்கின்றது. இப்பொழுது இதோ, இவரே இருக்கின்றார். இவரே பேசட்டும்" என்றார். அப்பொழுது "நான் அந்தப் பரமதரிசனத்துக்கு கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை" என்று பவுல் கூறின அந்த வேத வசனத்தை எடுத்துக் கொண்டேன். நான் "இங்குள்ள முன்னூறு பேருக்கும் அதிகமானவர்கள் உங்களை டாக்டர், இன்னார், இன்னார் என்று அறிமுகப் படுத்திக் கொண்டீர்கள். எனக்கு ஆரம்பப் பள்ளி கல்வியும்கூட கிடையாது. ஆயினும் இங்குள்ள ஒவ்வொருவருக்கும் நான் சவால் விடுகிறேன். உங்கள் வேதாகமத்துடன் இங்கு வந்து என் பக்கத்தில் நின்று கொண்டு, நான் கூறினவைகளில் ஒன்றையாகிலும் மறுதலியுங்கள் பார்க்கலாம்" என்றேன்.

"நீங்கள் அதைக் கேட்க விரும்பினால், அது ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் கண்டதிலேயே அது மிகவும் அமைதலான கூட்டமாகி விட்டது. நான், என்ன நேர்ந்தது? என்று கேட்டேன். நான் உங்களால் இந்த உபதேசங்களை ஆதரிக்க முடியாமற் போனால் விலகி நில்லுங்கள் என்றேன். அவர்கள் வெளியே இதைக் குறித்து அதிகச் சத்தமிடுகின்றனர். ஆனால் இந்தப் பிரச்சனையை முகமுகமாய் சந்திக்க வேண்டியத் தருணம் வரும்போது, அது வித்தியாசமாகி விடுகின்றது. அது உண்மை".

"அவர்கள் சென்ற பின்பு, டாமி ஹிக்ஸ், இதன் முன்னூறு ஒலி நாடாக்களை வாங்கி, எனக்குத் தெரிந்த, பாவனை செய்கின்ற திரித்துவ போதகர் (Trinity Preachers) ஒவ்வொருவருக்கும் அனுப்ப விரும்புகிறேன் என்றார். அங்கு வந்திருந்த மக்கள் என்னுடன் கைகுலுக்கி, நாங்கள் உம்முடைய கூடாரத்திற்கு வந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வோம் என்றனர். அவர்கள் எங்கே? என்னால் முடியாது. என் ஸ்தாபனம் என்னை அனுமதிக்காது. நான் ஒரு மனைவியைக் கொண்டேன். நான் ஏர்மாடு வாங்கினேன். நான் நிலம் வாங்கியிருக்கிறேன், அதைப் போய் பார்க்க வேண்டும், போன்ற சாக்குபோக்குகள்" என்று இக்கூட்டத்தின் சம்பவத்தை விளக்கிக் கூறியுள்ளார்.

## 7. ஏழு தரிசனங்கள் (Seven Visions):

1933ம் வருஷம் ஜீன் மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் தேவனுடைய தீர்க்கதரிசியாகிய பிரன்ஹாம், தொடர்ச்சியாக ஏழு தரிசனங்களைக் கண்டார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, அவருடைய வருகை சமீபமாய் இருக்கிற தென்றும், அவர் வருமுன் இந்த ஏழு தரிசனங்களும் நிகழ்ந்தேற வேண்டுமென்றும் தீர்க்கதரிசிக்கு அறிவித்தார்.



அவர் அவைகளையெல்லாம் எழுதிக் கொண்டு, அன்று காலையில் தேவனிடத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வெளிப்பாட்டை மக்களுக்கு எடுத்துரைத்தார்.

## 1.முஸோலினி எத்தியோப்பியாவின் மேல் படையெடுத்து அவமானமான முடிவை அடைவது.

தீர்க்கதரிசி முதலாவதாகக் கண்ட தரிசனம் முஸோலினி (Mussolini) என்பவன் எத்தியோப்பியாவின் மேல் படையெடுத்து அதை எளிதில் கைப்பற்றுவான் என்பதாம். தீர்க்கதரிசி முதலில் அதை அறிவித்தபோது, அநேக எதிர்ப்புகளுக்கு அது ஆளானது. ஆனால் அவர் கண்ட விதமாகவே அது சம்பவித்தது. முஸோலினி தன்னுடைய நவீன யுத்த ஆயுதங்களை உபயோகித்து அந்நாட்டைக் கைப்பற்றினான். அந்நாட்டின் சுதேசிகளுக்கு அவனை எதிர்க்கவும் கூடத் தருணமில்லாதபடியாயிற்று. முடிவில் முஸோலினி தன்னுடைய சொந்த ஜனங்களையே எதிர்த்து, பயங்கரமான முடிவை அடைவானென்றும் அத்தரிசனம் அவருக்கு வெளிப்படுத்தினது. அதுவும் பிழையில்லாமல் நிகழ்ந்தேறினது.

## 2.அடால்ஃப் ஹிட்லர் இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குக் காரணமாக இருந்து மர்மமான முடிவை அடைவது.

தீர்க்கதரிசி கண்ட அடுத்த தரிசனம், அடால்ஃப் ஹிட்லர் (Adolf Hitler) என்னும் ஆஸ்திரியா தேசத்தான், ஜெர்மனி நாட்டில் சர்வாதிகாரியாய்த் தோன்றி உலக மகா யுத்தம் நடைபெறக் காரணமாயிருப்பான் என்று முன்கூட்டி அறிவித்தது. சீக்ஃபிரீட் எல்லையையும் (Sigfried Lane) அதை மேற்கொள்ள அமெரிக்க சைனியங்கள் படும்பாடுகளையும்

அது தீர்க்கதரிசிக்குத் தெளிவாகக் காண்பித்தது. அன்றியும் ஹிட்லர் மர்மமான முடிவை அடைவான் என்பதையும் அது அவருக்குக் காண்பித்தது. இந்தத் தரிசனமும் பிழையில்லாமல் நிறைவேறினது.

## 3.பாஸீஸம், நாஸீஸம், கம்யூனிஸம் என்னும் மூன்று பெரிய இயக்கங்கள்.

தீர்க்கதரிசி கண்ட மூன்றாவது தரிசனம், உலக அரசியலோடு சம்பந்தப்பட்டது. பாஸீஸம் (Facism), நாஸீஸம் (Nascism), கம்யூனிஸம் (Communism) என்னும் மூன்று பெரிய இயக்கங்கள் இவ்வுலகத்தில் தோன்றுமென்றும், முடிவில் பாஸீஸமும் நாஸீஸமும் கம்யூனிஸத்தோடு கலந்துவிடும் என்றும் அந்தத் தரிசனம் அறிவித்தது. அப்பொழுது ருஷியாவை ஜாக்கிரதையாய் கவனிக்கவும், வடக்கு பாகத்தின் ராஜாவாகிய அவனைக் கவனிக்கவும் (Watch Russia, Watch Russia, the king of the north) என்ற சத்தத்தை அவர் கேட்டார். இந்தத் தரிசனமும் நிறைவேறி விட்டது. முசோலினியின் பாஸீஸமும் (Mussolini's Fascism), ஹிட்லரின் நாஸீஸமும் (Hitler's Nascism) மறைந்து கம்யூனிஸமே நிலைத்திருக்கிறது. அந்தச் சத்தம் சோவியத் யூனியனைக் கவனித்துப்பார் என்று சொல்லாமல் ருஷியாவை கவனித்துப் பார் என்று சொன்னது. இப்பொழுது ருஷியா U.S.S.R என்று அழைக்கப்படாமல் Russia (ருஷியா) என்றழைக்கப்படுகிறது.

## 4.இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஏற்படும் அறிவியல் முன்னேற்றம்.

நான்காவது தரிசனம், இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பிறகு, விஞ்ஞானத்தில் ஏற்படவிருந்த



முன்னேற்றத்தைக் காண்பித்தது, பிளாஸ்டிக் என்னும் சாதனத்தால் உண்டாக்கப்பட்ட ஒரு மோட்டார் வண்டி, யாரும் ஓட்டாமலேயே, தூரத்திலிருந்து இயக்கப்பட்டு (Remote Control) அழகான ரஸ்தாக்களின் வழியாய்ச் செல்வதை அவர் அத்தரிசனத்தில் கண்டார். அந்த வண்டியில் இருந்தவர்கள் ஏதோ ஒரு விளையாட்டில் குதுகலமாக ஈடுபட்டிருந்தனர். இவ்வகையான கார் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டாயிற்று. அதற்கேற்ற சாலை அமைப்பு இருந்தால் அவைகளை இயக்கலாம். முட்டை வடிவத்தில் கார்கள் இருக்கும் என்பதும் நிறைவேறிவிட்டது.

## 5. நல்லொழுக்கம் சிதைந்து போகுதல்.

ஐந்தாவது தரிசனம், நம்முடைய காலத்திலுண்டாகும் நல்லொழுக்கமின்மையைக் குறித்தது. பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்பட்டதனால், பெண்கள் மிஞ்சிவிட்டனர் என்பதைத் தேவன் அவருக்கு வெளிப்படுத்தினார். மனிதனின் அதிகாரத்திற்கு அவர்கள் இனியும் கீழ்ப்பட்டிருக்காமல் உரிமை கோரினர் என்பதின் அறிகுறியாக, அவர்கள் தங்கள் கூந்தல்களைக் கத்தரித்துக் கொண்டனர். மேலும் அவர்கள் ஆண்களின் உடைகளைத் தரித்து, கடைசியில் நிர்வாணிகளாகக் காணப்பட்டனர். அந்தத் தரிசனத்தின் கடைசி பாகத்தில், அத்தி இலையின் வடிவில் அமைந்த ஒரு சிறு துணியை மாத்திரம் இடுப்பின் முன்னால் உடுத்தி, மற்றபடி முழுவதும் நிர்வாணமாயிருந்த ஒரு பெண்ணைக் கண்டார். முழு உலகமும் தாறுமாறான நிலையையடைந்து நல்லொழுக்கத்தைக் கைவிடும் என்பது அவருக்கு உணர்த்தப்பட்டது. இந்தத் தரிசனமும் அழகிப் போட்டி (Beauty Contest) மற்றும் பலவிதமான காட்சிகள் மூலம் நிறைவேறி வருகிறது.

## 6.அமெரிக்காவில் ஒரு பெண் பெரிய அதிகாரத்திற்கு வருவது.

தீர்க்கதரிசி கண்ட ஆறாம் தரிசனத்தில், மிகவும் அழகுள்ள ஒரு பெண் அமெரிக்காவில் தோன்றினாள். அவள் அழகிற்சிறந்திருந்தாலும், மிகவும் கொடூரமான குணம் படைத்தவளாயிருந்தாள். ரோமன் கத்தோலிக்க சபை அமெரிக்காவில் வளர்ந்து ஆதிக்கம் பெறுவதை இது குறிக்கிறது என்று அவர் நம்புவதாகவும், இல்லையேல், அமெரிக்காவின் ஸ்திரீகள் ஓட்டுரிமை பெற்றதன் காரணமாக, ஒரு ஸ்திரீ அமெரிக்காவில் அரசியல் வல்லமை பெறுவதையும் இது குறிக்கலாம் என்றும் விளக்கமளித்தார். இது தற்போது அமெரிக்காவில் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. கமலா ஹாரிஸ் (Kamala Harris) என்ற பெண்மணி இப்பொழுது அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கிறார். அமெரிக்கா சுதந்திரம் அடைந்து 246 வருடங்கள் ஆகிறது. பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் தேசமான அங்கே இதுவரைக்கும் ஒரு பெண் ஜனாதிபதியாக வரவில்லை. கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியை உறுதிப்படுத்துகிறார்.

## 7.அமெரிக்காவின் அழிவு.

அவர் கடைசியாகக் கண்ட ஏழாம் தரிசனத்தில், “மிகப்பெரிய சத்தத்தைக் கேட்டேன். நான் திரும்பிப் பார்த்தபோது, அமெரிக்கா முழுவதும் பாழடைந்து, இடிந்து புகைக்காடாய் இருக்கக் கண்டேன்” (Destruction of America) என்று சொல்லியிருக்கிறார். அதுவும் நிச்சயமாக நிறைவேறும்.

கடந்த ஐம்பது வருஷங்களாக, இவ்வுலகத்தில் வேகமாக நேர்ந்த மாற்றங்களையும், இந்த ஏழு தரிசனங்களையும் ஆதாரமாகக் கொண்டு பார்க்கும்போது, நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பது தெளிவாகிறது. தீர்க்கதரிசி



கண்ட ஏழு தரிசனங்களில் முதல் ஆறு தரிசனங்கள் பிழையில்லாமல், அவர் கண்ட விதமாகவே நிறைவேறியிருக்கிறது. கடைசி தரிசனமும் விரைவில் நிறைவேறும் என்பது உறுதி.

## 11. உரைக்கப்பட்ட வார்த்தை நிறைவேறுதல் (Spoken Word Manifestation):

ஆதாம் ஒரு தேவபுத்திரனாக இருந்தான். உலகத்தில் பாவம் பிரவேசிப்பதற்கு முன் அவன் என்ன சொன்னாலும் அது நடக்கும். ஆண்டவர் அவனுக்கு எல்லாவற்றின் மேலும் அதிகாரம் கொடுத்திருந்தார். காற்றைப் பார்த்து வீசாதே என்றால் அது வீசாது. ஒரு சிங்கத்தைப் பார்த்து வா என்றால் அது வரும். ஆனால் அவன் பாவம் செய்தபின்பு அந்த ஆளுகையை இழந்துபோனான். தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அந்த ஆளுகையைத் திரும்ப அளிக்கப் போகிறார் என்று வேதம் சொல்லுகிறது. **மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது** (ரோமர் 8: 19). இப்பொழுது, அதற்குக் காலம் வந்திருக்கிறது. **ஆதாமைப் போல சகோ. பிரன்ஹாம் ஒரு தேவ புத்திரனாக இருந்தார்.** அதை உறுதிப்படுத்தும் விதமாக அவருடைய வாழ்க்கையில் நடந்த ஐந்து முக்கியமான சம்பவங்களை நாம் பார்க்கலாம்.

### 1.சிறிய மீனுக்கு ஜீவனை அளிப்பது (Resurrection of a Little Fish):

ஒரு நாள் சகோ. பிரன்ஹாம் தன்னுடைய நண்பரான லைல் உட் (Lyle Wood) என்பவரோடு மீன்பிடிக்கச் சென்றிருந்தார். அதற்கு முன்னால் கர்த்தர் அவருக்கு “ஏதோ ஒன்று உயிர்த்தெழப்போகிறது” என்று சொல்லியிருந்தார்.

அவர்கள் அங்கே இருக்கும்போது, சகோ. லைல் உட் மிகச்சிறிய மீன் ஒன்றைப் பிடித்தார். அவருடைய தூண்டில் ஊக்கு பெரியதாக இருந்ததால் அந்த மீனை எடுக்கும்போது அதின் குடல் முதலான உறுப்புகள் சிதைந்து அது மரித்துப்போனது. லைல் உட் அதைத் திரும்ப தண்ணீரில் தூக்கி வீசிவிட்டார். அந்த உயிரற்ற மீன் காற்றில் இங்கும் அங்கும் அசைந்து கொண்டிருந்தது.

சகோ. பிரன்ஹாம் தன்னுடைய நண்பரிடம் மீனை எப்படிச் சரியாகப் பிடிக்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருக்கும்போது, அங்கே சுழல்காற்று (Whirldwind) வந்தது. தேவனுடைய ஆவி படகிற்கு மேலாக வந்து, "நீ எழுந்து நில்" என்றார். "நான் உனக்கு உன் ஜீவனை மறுபடியும் கொடுக்கிறேன்" என்று "அந்த செத்த மீனைப் பார்த்துப் பேசு" (Speak to that dead fish) என்றார். அந்த மீன் மரித்து அரைமணி நேரமாகியிருந்தது. **சகோ. பிரன்ஹாம் அந்த மீனைப் பார்த்து "சிறிய மீனே, இயேசுகிறிஸ்து உன் ஜீவனை உனக்குத் திரும்ப கொடுக்கிறார். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் நீ பிழைப்பாயாக"** ("Little fishy, Jesus Christ gives you back your life. Live in the Name of Jesus Christ") என்று சொன்னார். **உடனே அந்த மீனின் உறுப்புகள் எல்லாம் சரியாகி அது நன்றாக நீந்திச் சென்றது.**

## 2.அணில்கள் சிருஷ்டிக்கப்படுதல் (Creation of Squirrels) :

சகோ. பிரன்ஹாம் ஒரு சிறந்த வேட்டைக்காரராய் இருந்தார். அதில் கென்டக்கி அணில் (Kentucky Squirrel) என்பது அவருக்குப் பிடித்த வேட்டைப்பொருளாக இருந்தது. அது பெரிதாக இருக்கும். ஒரு நாள் வேட்டைக்குப் போகும் போது அவருக்கு ஒரு அணில் கூட கிடைக்கவில்லை. வெயில் ஏறினதால் அவர் சற்று இளைப்பாறும்போது, "இந்த மலையைப்



பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ" (மாற்கு 11:23) என்ற வசனத்தைத் தியானித்துக் கொண்டிருந்தார்.

இவ்விதமாக அவர் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு சத்தம் அவருடன் பேசி (A Voice Spoke to him) "உனக்கு இப்பொழுது என்ன வேண்டும்? அதைச் சொல், அப்பொழுது நீ அதைப் பெற்றுக்கொள்வாய்" என்று சொன்னது. அவர் அடிக்கடி அந்தச் சத்தத்தைக் கேட்டிருந்தும் திடுக்கிட்டு அந்தச் சத்தம் எங்கேயிருந்து வந்தது என்று சுற்றிப்பார்த்தார். மறுபடியும் அந்தச் சத்தம் முன்சொன்னதுபோலவே சொன்னது. அப்பொழுது சகோ. பிரன்ஹாம், "நான் அணில் வேட்டைக்கு வந்திருக்கிறேன். எனக்குச் சில அணில்கள் வேண்டும்" என்று பதிலளித்தார். அந்தச் சத்தம் அவருக்கு மறுமொழியாக "எத்தனை அணில்கள் வேண்டும் என்று கேட்டது?" அதற்கு அவர், மூன்று அணில்கள் ஆகாரத்திற்குப் போதுமானதாக இருக்கும் என்பதால், "எனக்கு மூன்று அணில்கள் வேண்டும்" என்றார். "சரி முதலாவது அணில் எங்கே வரவேண்டும்" என்று அந்தச் சத்தம் கேட்டது. சகோ. பிரன்ஹாம், தான் ஒரு தரிசனம் காண்கிறதாக நினைத்தார். ஆனால், அவருக்கு இவ்விதமான அனுபவம் இருந்ததால் "அந்தக் காட்டத்திமரத்தின் கிளையிலே ஒரு அணில் வருவதாக" என்று சொன்னார். **பொதுவாகக் காட்டத்திமரத்தில் (Sycamore Tree) அணில் இருக்காது.** அவர் தம்முடைய பதிலைச் சொல்லி முடிப்பதற்குள் அந்த மரத்திலே ஒரு அணிலைக் கண்டார். மறுபடியும் அவர் தரிசனம் காண்கிறதாகவே நினைத்தார். ஆனால் தன்னுடைய துப்பாக்கியினால் அதைச் சுட்டவுடன் அது தரையில் விழுந்தது. இரத்தம் கசிந்திருப்பதைப் பார்த்து அது தரிசனமல்ல என்று உணர்ந்தார்.

உடனே அணிலை எடுத்துக்கொண்டு "நன்றி கர்த்தாவே" என்று சொல்லிப் புறப்படுவதற்காகத் திரும்பினார்.

அந்தச் சத்தம் மறுபடியும் பேசி “இரண்டாவது அணில் எங்கே வரவேண்டும்” என்று சொன்னது. அவர் திரும்பிப் பார்த்தபோது அங்கே கடலக மரம் (Locust Tree) ஒன்று இருந்தது. “ஒரு அணில் அந்த மரத்தின் உச்சியில் ஏறி, நான் சரியாக அதின் கண்ணைக் குறிவைக்கும்படி அங்கே உட்காரட்டும்” என்றார். உடனே அங்கே அந்த அணில் தோன்றினது. அவர் அதைச் சரியாகக் கண்ணில் சுட்டு எடுத்துக்கொண்டார். “நன்றி கர்த்தாவே, உம்முடைய வார்த்தை உண்மை” என்று சொல்லி அங்கிருந்து புறப்பட நினைத்தார். அந்தச் சத்தம் அவரைத் தடுத்து “நீ மூன்று அணில்கள் வேண்டும் என்று கேட்டாய் அல்லவா?” என்றது. அவர் “ஆம், நான் மூன்று கேட்டேன்” என்று சொல்லி, “அங்கே விவசாயிகள் தானியம் பொறுக்கும் வயலைத்தாண்டி இருக்கும் மரத்தின் கிளையில் ஒரு அணில் குதித்து அங்கே உட்காரவேண்டும்” என்று அந்த இடத்தைக் குறிப்பிட்டுக் காண்பித்தார். அவர் எப்படிக் கேட்டாரோ அப்படியே ஒரு அணில் அங்கே தோன்றி அவர் குறிப்பிட்டுச் சொன்ன இடத்தில் நின்றது. அவர் அதைச் சுட்டு எடுத்துக் கொண்டார். இவ்விதமாகக் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியின் மூலமாகச் சிருஷ்டிப்பின் வல்லமையை வெளிப்படுத்தினார்.

## 3.சகோதரி.ஹேட்டி ரைட் அவர்களின் பிள்ளைகள் இரட்சிக்கப்படுதல் (Salvation of Sis. Hattie Wright's Sons):

ஜெபர்ஸன்வில்லில் சகோதரி ஹேட்டி (Hattie Wright) என்ற ஒரு ஏழை விதவை இருந்தார். அவர் சகோ. பிரன்ஹாமின் சபைக்கு வரும் தாழ்மையான ஒரு சகோதரி. அவருக்கு வாலிபப் பிராயத்தில் இருக்கும் இரட்சிக்கப்படாத இரண்டு ஆண் பிள்ளைகளும், கால்கள் முடமான எடித் (Edith) என்ற ஒரு சகோதரியும் இருந்தார்கள். சகோ. பிரன்ஹாமும் சகோ.பேங்ஸ் உட்டும் ( Bro.Banks Wood) அவர்கள்



வீட்டிற்குச் சென்றிருக்கும்போது, சில நாட்களுக்கு முன்னால் கர்த்தர் அணில்களைச் சிருஷ்டித்ததைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது சகோ. பிரன்ஹாம், கர்த்தர் யேகோவா யீரேவாக இருக்கிறார், அவர் ஆபிரகாமுக்கு ஒரு ஆட்டுக்கடா தேவைப்படும்போது எப்படி சிருஷ்டித்துக் கொடுத்தாரோ அதைப்போலவே எனக்கும் அணில்களைச் சிருஷ்டித்துக் கொடுத்தார் என்று சொன்னார். அப்பொழுது, “சகோ. பிரன்ஹாம் அவர்களே, **அது சத்தியமேயல்லாமல் வேறொன்றுமில்லை” (That's nothing but the Truth) என்று சகோதரி ஹேட்டி சொன்னார்கள். அவர்கள் சரியான ஒன்றைக் கூறினார்கள். உடனே பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை அனைவரும் உணர்ந்தார்கள்.**

சகோ. பிரன்ஹாம் எழுந்து நின்று “சகோதரி ஹேட்டி அவர்களே, நீங்கள் அந்த சீரோபேனிக்கியா ஸ்திரீயைப் போல சரியான ஒன்றைக் கூறினீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (Thus saith The Lord). இப்பொழுது உங்கள் இருதயத்தின் விருப்பத்தை உங்களுக்குக் கொடுக்கும்படி பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசுகிறார். நான் தேவனுடைய ஊழியக்காரனாக இருந்தால் அது நடக்கும். இல்லையென்றால் அது நடக்காது, நான் ஒரு பொய்யனாகவும், ஏமாற்றுகிற வனாகவும் இருப்பேன். இது தேவனுடைய ஆவியா? இல்லையா? என்பதை நீங்களே பாருங்கள்” என்று சொன்னார்.

சகோ. பிரன்ஹாம் அவர்களே நான் என்ன கேட்க வேண்டும்? என்று அந்தச் சகோதரி சொன்னார்கள். “உங்களுக்கு முடமான ஒரு சகோதரி இருக்கிறார்கள். அவர்களுடைய சுகத்திற்காகக் கேட்கலாம். நீங்கள் மிகவும் ஏழையாக இருக்கிறீர்கள், நீங்கள் பணத்தைக் கேட்டால்

இப்பொழுது உங்கள் மடியில் அது வருவதை நீங்கள் பார்க்கலாம். இது நடக்கவில்லையென்றால், நான் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியாக இருப்பேன்” என்று சகோ . பிரன்ஹாம் சொன்னார்.

அந்தச் சகோதரியின் இரண்டு பிள்ளைகளும் பயபக்தியில்லாமல் சகோ.பிரன்ஹாம் சொல்லுவதைக் கேட்டு சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் தாயிடம் முரட்டுதனமாக நடக்கும் பிள்ளைகளாயிருந்தார்கள்.

நான் எதைக் கேட்கவேண்டும் என்று அந்தச் சகோதரி மறுபடியும் சகோ. பிரன்ஹாமைக் கேட்கும்போது, “நீங்கள்தான் தீர்மானம் செய்யவேண்டும், நான் உங்களுக்காகத் தீர்மானம் செய்ய முடியாது” என்று கூறிவிட்டார். அவர்கள் சுற்றிப்பார்த்து, “சகோ.பிரன்ஹாம் அவர்களே, என்னுடைய இரண்டு பிள்ளைகளும் இரட்சிக்கப்படுவதே என்னுடைய இருதயத்தின் மிகப்பெரிய வாஞ்சையாயிருக்கிறது” (The greatest desire in my heart is the Salvation of my two boys) என்று சொன்னார்கள். உடனே, சகோ. பிரன்ஹாம், “இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுடைய பிள்ளைகளை உங்களுக்குக் கொடுத்தேன்” (I give you your boys, in the Name of Jesus Christ) என்று சொன்னார். உடனே அந்த இரண்டு பிள்ளைகளும் தங்கள் தாயின் மடியில் வந்து விழுந்து தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். அப்பொழுதே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள்.

தன்னுடைய சகோதரிக்குச் சுகத்தைப் பெற்றிருந் தாலும், தங்களுக்கு வேண்டிய பணத்தைப் பெற்றிருந்தாலும் அதெல்லாம் அழிந்துபோகக்கூடியதாக இருக்கிறது. ஆனால், அழிவில்லாத ஆத்தும இரட்சிப்பை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.



## 4.சகோதரி மேடா அற்புதமாகச் சுகத்தைப் பெறுவது (Sister Meda’s Miraculous Healing):

1962ம் வருஷம் சகோ. பிரன்ஹாமின் மனைவி சகோதரி மேடா தன்னுடைய சரீரத்தின் இடதுபக்கத்தில் ஒருவிதமான வலியை உணர்ந்தார். அங்கே சிறிது வீக்கமாகவும் காணப் பட்டது. மருத்துவரிடம் காண்பிக்கும்போது, அது ஒரு சிறிய கட்டி (Tumor) என்றும், அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் கூறினார். ஆனாலும், விசுவாசத்தோடு கர்த்தருக்குக் காத்திருக்க முடிவு செய்தார்கள். கட்டி வளர்ந்து கொண்டே இருந்தது. அவர்கள் ஜெபர்சன்வில்லிலிருந்து (Jeffersonville) டுயூக்சான் (Tucson) என்ற இடத்திற்குக் குடியேறினார்கள்.

கட்டி மிகப்பெரியதாக மாறி அசௌகரியத்தை ஏற்படுத்தினது. சகோ.பிரன்ஹாம் நியுயார்க்கில் (New York) தொடர்ச்சியான கூட்டங்களை முடித்துவிட்டு அப்போதுதான் திரும்பியிருந்தார். அவர் ஷ்ரீவிபோர்ட் (Shreveport) என்ற இடத்தில் கூட்டத்தை முடித்துவிட்டு டுயூக்சான் வர வேண்டும் என்றிருந்தார். சகோதரி. மேடா அவருக்குப் போன் செய்து, தன்னால் நடக்கக்கூட முடியவில்லை என்றும், மருத்துவர் உடனே அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்று கூறுவதாகவும் சொன்னார். அவர்களிடம் சற்றுப் பொறுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, சகோ. பிரன்ஹாம் ஜெபர்சன்வில்லில் அவர்கள் வீட்டில் வழக்கமாக குடும்பமாக ஜெபிக்கும் இடத்தில் தன் மனைவிக்காக மிகவும் பாரப்பட்டு அதிக உருக்கத்தோடு ஊக்கமாக ஜெபம் செய்தார். தேவன் தன்னுடைய மனைவிமேல் இரக்கமாய் இருக்கும்படி வேண்டிக் கொண்டார்.

அப்பொழுது அறையிலே அக்கினி ஸ்தம்பம் (Pillar of Fire) தோன்றினது. தேவனுடைய சத்தம் அவரிடம் பேசி, “நீ

எழுந்து நில். நீ என்ன விரும்புகிறாயோ அதைச் சொல், அது நீ சொன்னபடியே நடக்கும்” (Stand up on your feet. Say whatever you will and it will be exactly as you say it) என்று கூறினது. இந்த வல்லமைமிக்க வாக்குத்தத்தத்தை சகோ.பிரன்ஹாம் நன்றாக அறிந்திருந்ததால் “மருத்துவர் அவளைத் தொடுவதற்குமுன் கட்டி நீங்குவதாக” (Let it be that just before the doctor touches her, the tumor will disappear) என்று கூறினார்.

அடுத்த நாள் சகோதரி மேடாவும் (Sis.Meda), சகோதரி நார்மனும் (Sis.Norman) பரிசோதனைக்குச் சென்றார்கள். செவிலியர் அவரைப் பரிசோதனைக்கு ஆயத்தப் படுத்தினார்கள். மருத்துவர் உள்ளே பிரவேசித்து, கட்டியின் அளவு எவ்விதமாக இருக்கிறது என்று பார்க்க முற்படும்போது சகோதரி. மேடா தங்கள் சரீரத்தில் ஒருவிதமான குளிர்ச்சியையும், சுருங்கும் தன்மையையும் (She felt a cool, shrinking feeling) உணர்ந்தார்கள். அதன்பின்பு மருத்துவர், சகோதரியின் இடது பக்கத்தில் தொட்டுப்பார்த்தார். கட்டி இல்லை. வலது பக்கத்திலும் தொட்டுப்பார்த்தார், கட்டி இல்லை. அந்தக் கட்டி உங்கள் இடது பக்கத்தில்தானே இருந்தது என்று கேட்டார். அவர் ஆம் என்றார். “என்ன நடந்தது என்று தெரியவில்லை, ஆனால் இப்பொழுது கட்டி இங்கே இல்லை, என்னால் அதை விளக்க முடியவில்லை, ஆனால் நீங்கள் வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை” என்று மருத்துவர் கூறினார்.

## 5.பனிப்புயலை நிறுத்துவது (Stopping A Blizzard):

1963ம் வருடம் சகோ. பிரன்ஹாம் தன்னுடைய நண்பர்களோடு கொலொரடோ என்ற மலைப்பகுதிக்கு (Mountains of Colorado) மான் வேட்டைக்குச் சென்றார். அவர்கள் இருந்த இடத்திலே மறுநாள் காலையில் பனிப்புயல்



(Blizzard) வரப்போவதாக வானிலை அறிக்கை வந்தது. மற்ற வேட்டைக்காரர்கள் மலையில் இருந்து வேகமாக இறங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தப் புயலைச் சந்திக்க ஆயத்த மில்லாமல் இருப்பவரைக் கொல்லும் அளவுக்கு அது பயங்கரமாக இருக்கும் என்றும், அது ஒரு கூடாரத்தையே மூடும் அளவுக்குப் பனியைக் கொண்டு வரும் என்றும் சகோ.பிரன்ஹாம் தன்னோடு இருப்பவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். சில நண்பர்கள் மலையில் இருந்து கீழே இறங்கிவிட்டார்கள். மூன்று பேர் சகோ.பிரன்ஹாமுடன் இருந்தார்கள்.

மறுநாள் காலையில் அவர்கள் ஒவ்வொரு திசையில் வேட்டைக்குச் சென்றார்கள். சகோ. பிரன்ஹாம் பனிச்சாரல் தொடங்கினால் உடனே தங்கள் இடத்திற்குத் திரும்பும்படிச் சொல்லியிருந்தார். சற்று நேரத்திற்குப் பின்பு, பெரிய பெரிய பனிக்கட்டிகளுடன் வேகமான காற்று வீசியது. சிறிது நேரத்தில் தனக்குமுன் முப்பது அடி தூரத்தை மாத்திரம் காணும் அளவுக்கு பனி மூடியது. வேகமாக கீழே இறங்குவதற்கு அவர் முயன்றபோது, “நில், திரும்பி செல்”, (Stop, Go back) என்ற சத்தத்தைக் கேட்டார். ஆனால் அவர் கீழ்நோக்கி தொடரும் போது, மறுபடியும் அந்தச் சத்தம் “நில் திரும்பி செல்” (Stop Turn around and go back) என்று கூறியது.

எதற்கு தேவன் நம்மை இந்தப் புயல் நேரத்தில் மீண்டும் மலைக்குப் போகச் சொல்லுகிறார் என்று நினைத்தார். அவர் வாழ்க்கையில், இதுவரை தேவன் அவரைத் தவறான திசையில் நடத்தியதில்லை. நான் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கும் போது, “நான் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர், நான் காற்றையும் மழையையும் உண்டாக்கினேன். இயற்கை எனக்குக் கீழ்ப்படியும் (I am the Creator of heaven and earth. I made the wind and the rain.

Nature obeys Me.) என்ற மிகத் தெளிவான சத்தத்தைக் கேட்டார். வழக்கமாக தேவன் அவரிடம் பெரிய வெளிச்சத்தில் இருந்துதான் பேசுவார். இப்பொழுது வெளிச்சத்தைக் காணாததால், “மகத்தான யேகோவாவே, அது நீர் தானா? (Great Jehovah, is that You?) என்றார். **“கலிலேயா கடலில் காற்றையும் அலைகளையும் நிறுத்தியவர் நான் தான். அணில்களை உண்டாக்கும்படி உன்னிடம் பேசியது நான் தான். நான் தேவன். இந்தப் புயலிடம் பேசு, அது உனக்குக் கீழ்ப்படியும்** (I was the one who made the winds and waves cease on the sea of Galilee. I am the one who told you to speak those squirrels into existence. I am God. Speak to this storm and it will obey you) என்று தேவன் சொன்னார். அந்தச் சத்தம் வேதத்திற்கு ஒத்து இருந்ததால், சிருஷ்டிகர் தான் பேசுகிறார் என்பதை சகோ. பிரன்ஹாம் அறிந்துகொண்டார். “மேகங்களே, பனியே, பனிமழையே, காற்றே, உங்களை நான் எதிர்க்கிறேன். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்கள் இடங்களுக்குத் திரும்பிப்போங்கள். இப்பொழுதே சூரியன் உதித்து என்னுடைய வேட்டை முடியும் நாட்கள்வரை அனுதினமும் பிரகாசிக்கக்கடவது” (Clouds, snow, sleet and wind, I resent your coming. In the Name of Jesus Christ, go back to your former places. I say that the sun must come out immediately and shine every day until my hunting trip is over) என்றார்.

உடனே காற்றின் வேகம் குறைந்து, எதிர்ப்புறமாக வீசி மேகங்களை நீங்கச் செய்தது. பனிப்பொழிவு நின்றது. அவர் பேசிய ஐந்து நிமிடத்தில் சூரியன் நன்றாகப் பிரகாசித்து, தரையில் இருந்த பனியை உருகச் செய்தது. சற்று நேரத்தில் மிக அழகான சூழ்நிலை உருவானது. சகோ. பிரன்ஹாம் “சிருஷ்டி கர்த்தர் நம் அருகில் இருக்கிறார், எல்லாம் அவர் கையில் இருக்கிறது” என்று நினைத்து அவர் அடுத்து என்ன



சொல்லுவார் என்றிருக்கும்போது, நீ ஏன் இந்த இடத்தில் என்னோடு நடக்கக்கூடாது” (Why don’t you walk with Me through this wilderness) என்று தேவன் சொன்னார். “ஆம், ஆண்டவரே, அது பெரிய சிலாக்கியம். உம்மோடு நடப்பது நான் செய்யும் மிகப்பெரிய காரியமாகும்” (Yes, Lord, it would be a privilege. Walking with you is one of the greatest things I could ever do) என்று சொன்னார். இவ்விதமாக இயற்கை அவருக்குக் கீழ்ப்படியும்படி தேவன் செய்தார்.

ஆகையால், எலியா ஒரு தூதனாக (Angel) இருக்க வேண்டும், ஒரு முன்னோடியாக (Forerunner) இருக்க வேண்டும், ஒரு சத்தமாகவும் (Voice) இருக்க வேண்டும். எல்லாமே இந்த ஏழாம் தூதனில் நிறைவேறுகிறது. சரித்திரம் மறுபடியும் வருகிறது (History repeats again). முதலில் பழைய ஏற்பாட்டில் உள்ள எலியா, பின்பு யோவான் ஸ்நானன், இப்பொழுது இந்தக் கடைசிகால எலியா சகோ. பிரன்ஹாமில் அது நிறைவேறுகிறது. அவருடைய வாழ்க்கை, அவருடைய தரிசனம், அவருடைய ஊழியம் எல்லாம் தேவனுடைய வார்த்தையின் படி இருக்கிறது. அந்தத் தீர்க்கதரிசியை 1965ம் வருஷம், டிசம்பர் 24ம் தேதி கர்த்தர் எடுத்துக்கொண்டார். அவர் மரித்துப்போனாலும் அவருடைய செய்தி இன்றைக்கும் ஜீவிக்கிறது. அது மரிக்கவில்லை. 1100 செய்திகளுக்கு மேலாக ஒலி நாடாக்களில் (tapes) பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அது இன்றைக்கும் இருக்கிறது. அந்தச் செய்திதான் சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்து சொன்னதுபோல, எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான் என்ற வார்த்தை நிறைவேறியிருக்கிறது. அந்தச் செய்தி **பரிபூரணமான வார்த்தையாக (Fullness of Word) இருக்கிறது. அது நம்மை அப்போஸ்தல விசுவாசத்திற்குத் (Apostolic Faith) திருப்புகிறது.** இயேசுகிறிஸ்து, நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதை

அவருடைய ஊழியமும், அவருடைய செய்தியும் வெளிப்படுத்துகிறது.

ஆகையால், நாம் மனுஷனை உயர்த்தவில்லை, கிறிஸ்துவைத்தான் உயர்த்துகிறோம். சகோ. பிரன்ஹாம் இயேசு கிறிஸ்து இல்லாதபடி ஒன்றும் செய்யமுடியாது. இயேசுகிறிஸ்து மாம்சத்தில் இருந்தபோது செய்த காரியங்களை, இந்தக் கடைசி காலத்தில் ஒரு தாழ்மையான மனுஷனாகிய சகோ.பிரன்ஹாம் மூலமாகவும் திரும்பவும் செய்தார் (It was Jesus Christ performing(through a humble prophet) the same works He did when He walked in human flesh upon this earth). இயேசுகிறிஸ்து வார்த்தையை வெளிப்படுத்தினார்.

யோவான் ஸ்நானனைச் சிலர் கிறிஸ்து என்று தவறாகப் புரிந்து கொண்டார்கள். அதைப் போலவே, இந்தச் செய்தியாளனையும், இந்த எலியாவையும், கிறிஸ்து என்று தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். அவர் கிறிஸ்து அல்ல. அவர் ஒரு சகோதரன். அவர் ஒரு தீர்க்கதரிசி. எலியாவின் ஆவியை உடையவர். அவர் ஏழாம் சபையின் தூதன். இந்த எலியாவின் செய்தி நம்மை வார்த்தைக்குத் திருப்புகிறது. அன்றைக்கு எலியாவின் செய்தி யேசபேலின் உபதேசத்திலிருந்து வார்த்தைக்குத் திருப்பினது. அதைப் போலவே, இந்த எலியாவின் செய்தி யேசபேல் மார்க்கத்திலிருந்தும் ஸ்தாபன மார்க்கத்திலிருந்தும் (Denominational System) நம்மைப் பரிபூரணமான வார்த்தைக்குத் (Fullness of the Word) திருப்புகிறது. அப்பொழுதுதான் கர்த்தருடைய வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்படுவோம். கர்த்தருடைய வருகைக்கு முன்பாக அவர் எலியா தீர்க்கதரிசியை அனுப்பி, அவர் சத்தியத்தை வெளிப்படுத்தின பின்புதான் அவர் வருவார்; அதுவரைக்கும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேதுரு அப்போஸ்தல நடபடிகள் 3ம் அதிகாரத்தில் சொன்ன வண்ணமாக அவர் காத்திருக்கிறார்.



இன்றைக்குச் சத்தியம் திரும்ப அளிக்கப்பட்டிருக்கிறது. அன்றைக்கு எலியாவைத் தவறவிட்டதால், இயேசு கிறிஸ்துவைத் தவறவிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் எருசலேமின் பேரழிவு வந்தது. அதைப்போலவே, இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட இந்த எலியாவாகிய சகோ. பிரன்ஹாமின் செய்தியை ஜனங்கள் தவறவிடுகிறதினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் வருகையில் போகமுடியாது. அவர்கள் பேரழிவைச் சந்திக்க வேண்டியதாக இருக்கும். உலக அழிவைச் சந்திக்க வேண்டியதாக வரும்.

## 12. இயேசுகிறிஸ்துவின் மூன்று வருகைகள் (Three Comings of Jesus Christ):

இயேசுகிறிஸ்துவின் வருகை மூன்று சம்பவங்களாக இருக்கிறது.

1. அவர் மணவாட்டியை மீட்க வந்தார் ( He came once to redeem His bride) (மத் 1:21; யோவான் 3:16, எபே 1:7, எபி 9:12).

2. அவர் தம்முடைய மணவாட்டியை மேலே எடுத்துக் கொள்வதற்காக வருகிறார். (Next to receive His bride in the Rapture) (I கொரி 15:51, 52; 1 தெச 4:16, 17)

3. தம்முடைய மணவாட்டியோடு கூட வந்து இந்த உலகத்தை ஆயிரம் வருஷம் ஆளுகை செய்கிறார்(To rule with His bride in the Millennium) (வெளி 20:6).

ஒவ்வொரு வருகைக்கும் முன்னதாக எலியாவின் ஊழியம் இருக்கிறதை நாம் காண்கிறோம். முதலாம் வருகைக்கு முன்னதாக, கர்த்தர் யோவான் ஸ்நானனை

அனுப்பினார். அவன் அவருடைய வருகைக்கு ஒரு முன்னோடியாக இருந்தான். இரண்டாம் வருகைக்கு முன்னதாக, சகோ.பிரன்ஹாமை ஆண்டவர் அனுப்பி யிருக்கிறார். ஆயிர வருட ஆளுகைக்கு முன்னதாக, ஆண்டவர் உண்மையான யூதர்களுக்காக (1,44,000 பேர்) எலியாவின் ஆவியையும், மோசேயின் ஆவியையும் (Two Witnesses) உபத்திரவகாலத்தில் அனுப்புகிறார். இவ்விதமாக, அவருடைய மூன்று வருகையிலும் எலியாவின் ஊழியம் ஒரு முன்னோடியாக இருக்கிறதை நாம் காண்கிறோம். ஆகையால், எலியா முந்திவரவேண்டும் என்பது வேதத்தின்படி சரியாக இருக்கிறது.

**பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த எலியாவே மறுபடியும் மாம்சத்தில் வருவதில்லை. வேதத்தில், ஒருவருக்கு ஒரு முறைதான் ஊழியம் கொடுக்கப்படுகிறது. அதே நபருக்கு இரண்டாம் முறை ஊழியம் கொடுக்கப்படுவதில்லை. இயேசுகிறிஸ்துவும் இரண்டாம் முறை மாம்சத்தில் வந்து ஊழியம் செய்யவில்லை. அவர் தம்முடைய அப்போஸ் தலரைத்தான் பயன்படுத்தினார். அவருடைய தீர்க்க தரிசிகளையும் பயன்படுத்துகிறார். எலியாவுக்கு ஒருமுறை ஊழியம் கொடுக்கப்பட்டது. அவன் மறுபடியும் மாம்சத்தில் வரப்போகிறதில்லை.** ஆனால், எலியாவின்மேல் இருந்த ஆவியைக் கர்த்தர் பயன்படுத்துகிறார். அவர் தம்முடைய ஒவ்வொரு வருகைக்கு முன்னதாகவும் எலியாவின் ஆவியைப் பயன்படுத்துகிறார் (its not the literal Elijah, but God uses the Spirit of Elijah before each Coming). தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அந்த எலியாவை அடையாளம் கண்டுகொள்ளுகிறார்கள். அவர்கள் அந்தச் செய்திக்குத் (Message) தங்களை ஒப்புக்கொடுத்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறார்கள்.



ஜனங்களை வார்த்தைக்குத் திருப்பவேண்டும் என்பது தான் எலியாவின் நோக்கம். ஒவ்வொரு தீர்க்கதரிசியின் நோக்கமும் அதுதான். ஜனங்களை வார்த்தைக்குத் திருப்பி, அவர்களைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தவேண்டும் என்பதுதான் எலியாவின் ஊழியத்தின் நோக்கமாக இருக்கிறது (Purpose of Elijah's Ministry is to restore the people to the Word and lead them to Christ)

## 13.தேவன் எலியாவின் ஆவியை ஐந்துமுறை பயன் படுத்துகிறார் (God uses the Spirit of Elijah five times):

நாம் கவனிக்கவேண்டிய காரியம் என்னவென்றால், எலியாவின் ஊழியம் (Ministry of Elijah) வேதத்தில் ஐந்து முறை வருகிறது.

1. பழைய ஏற்பாட்டின் எலியா தீர்க்கதரிசி

2. பழைய ஏற்பாட்டின் எலிசா தீர்க்கதரிசி.

3. கிறிஸ்துவுக்கு முன் (கர்த்தருடைய பெரிதான நாளுக்குமுன்) யோவான் ஸ்நானன்

4.உபத்திரவக்காலத்திற்கு முன் சகோ. வில்லியம் மரியன் பிரன்ஹாம்

5. உபத்திரவக்காலத்தில் இரண்டு சாட்சிகள் (மோசே, எலியா என்பவர்களுடைய ஆவியைப் பெற்றவர்கள்).

முதலாவதாக, எலியா தீர்க்கதரிசி 1 இராஜா 17:1-ல் காட்சியில் வருகிறான். அவன் எடுத்துக் கொள்ளப்பட்ட பின் அவனுடைய ஊழியம் அதோடு முடியவில்லை. அது எலிசா என்ற இன்னொரு தீர்க்கதரிசி மூலமாகத் தொடர்ந்தது. அந்த எலிசா எலியாவின் ஆவியை இரட்டிப்பாகப் பெற்றிருந்தான்

(2 இராஜா 2:11-15). அது எலியாவின் இரண்டாவது ஊழியம். எலியாவின் மூன்றாவது ஊழியம் யோவான் ஸ்நானன் என்ற தீர்க்கதரிசியின் மூலமாக இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்பாக வந்தது (மத்தேயு 17:12, 13, லூக்கா 1:17, மல்கியா 3:1). எலியாவின் நான்காவது ஊழியம், இந்தக் கடைசிகாலத்தில் சகோ. வில்லியம் மரியன் பிரன்ஹாம் என்ற தீர்க்கதரிசியின் மூலமாக இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக வந்திருக்கிறது (மல்கியா 4:5,6; மத்தேயு 17:11, வெளி 10:7; லூக்கா 17:30; அப்போஸ் 3:21). இப்பொழுது நாம் எடுத்துக்கொள்ளப்படுதலுக்காகக் காத்திருக்கிறோம்.

நாம் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, மூன்றரை வருட மகா உபத்திரவக் காலத்தின்போது இரண்டு சாட்சிகள் தோன்றி 1,44,000 யூதர்களுக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாட்டைப் பிரசங்கிப்பார்கள். அதில் ஒருவர் மோசேயின் ஆவியையும் ஒருவர் எலியாவின் ஆவியையும் உடையவராக இருப்பார்கள் (வெளி 11ம் அதிகாரம்). அதுதான் ஐந்தாவது முறையாக வரும் எலியாவின் ஊழியம். இந்த எலியா பழைய ஏற்பாட்டில் வருகின்ற அதே எலியா அல்ல. அந்த எலியாவின் ஆவியைக் கர்த்தர் அனுப்புகிறார். இயேசுகிறிஸ்து புறஜாதிகளிலிருந்து ஒரு மணவாட்டியைப் பெறும்படி புறஜாதிகளின் காலத்தின்போது யூதர்களின் கண்கள் மறைக்கப்பட்டிருந்தது (ரோமர் 11;25). அந்த இரண்டு சாட்சிகளின் ஊழியத்தின் மூலமாக அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்வார்கள்.

## முடிவுரை

கர்த்தருடைய பயங்கரமான நாள் வருவதற்கு முன்பாக அவர் எலியா தீர்க்கதரிசியை அனுப்பி, பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களாகிய அப்போஸ்தலப்



பிதாக்களின் (Apostolic Fathers) இருதயத்திற்குத் திருப்பி யிருக்கிறார். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்தான் (Elected) வில்லியம் மரியன் பிரன்ஹாம் என்ற இந்த எலியாவை ஏற்றுக் கொள்வார்கள். இந்தச் செய்தி அவர்களைப் பரிபூரணமான வார்த்தைக்குக் கொண்டுவரும். அவர்கள் கர்த்தருடைய வருகையில் பங்கு பெறுவார்கள். **இந்த எலியா தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தங்களை எவ்வளவு பெரிய விசுவாசியாக நினைத்துக் கொண்டாலும், தங்களைப் பரிசுத்தவான்களாக நினைத்துக்கொண்டாலும், அவர்கள் இயேசுவைச் சந்திக்க முடியாது. அவர்கள் அந்தப் பயங்கரமான நாளாகிய (Dreadful Day) உலக அழிவைத்தான் சந்திக்க வேண்டும். அந்த நியாயத்தீர்ப்பைத்தான் சந்திக்க வேண்டும்.**

மேலே சொல்லப்பட்ட காரியங்களெல்லாம் வேதத்தின்படி சரியாக இருப்பதால், இப்பொழுது கால அவகாசம் இருக்கும்போதே இந்தப் புஸ்தகத்தை வாசிக்கிறவர்கள், இந்த எலியா தீர்க்கதரிசியின் செய்தியைக் கேட்கும்படியாகவும் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாகும்படியாகவும் கேட்டுக் கொள்கிறேன். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**ஆமென்**